# கர்த்தரின் யுத்தங்கள்



ஆசிரியர் A.பால்ராஜ்

---



## எங்களுடைய வெளியீடுகள்

1. பரம குயவனின் பாத்திரங்கள் (சிறுவர் ஊழிய கதைகள்)
2. பாவத்தின் கொடிய வலையும், அதிலிருந்து விடுதலையும்
3. நான் தேடும் மனிதன் நீ தான் - இயேசு
4. சின்னப்பூக்கள் (சிறுவர் பாடல்கள் ACD)
5. ஜெபக்குறிப்புகள் - 100 (ஜெபக் கையேடு)
6. பரலோகத்தின் திறவுகோல்கள் (வாக்குத்தத்தங்கள் 250)

நாங்கள் “சுவிசேஷ அக்கினி” என்ற பெயரில் ஜெப சுற்றறிக்கை பிரதி மாதம் ஒருமுறை வெளியிடுகிறோம். இது வேதகாமத்திற்குள் வைத்து தினமும் படித்து ஜெபிக்கிறதற்கு ஏதுவாக சிறிய அளவே இருக்கும். உங்களுக்கு இது தேவனோடு உறவாடுவதற்கு மிக பிரயோஜனமாகவும், ஜெபிக்க பழகவும் பிரயோஜனமாக இருக்கும். இந்த ஜெப சுற்றறிக்கை வேண்டுவோர் எங்கள் முகவரிக்கு தங்களுடைய விலாசத்தை எழுதி அனுப்பினால் நாங்கள் உங்களுக்கு தொடர்ந்து அனுப்பி வைப்போம்.


சகோ. A.பால்ராஜ்

**Gospel Missionary Prayer Fellowship**

**சுவிசேஷ மிஷினெரி ஜெப ஐக்கியம்**

5/110, சாமிபுரம் காலனி, சிவகாசி கிழக்கு - 626 189.
விருதுநகர் மாவட்டம், (த.நா) தென் இந்தியா
செல் : 94431 78673

*Web : www.gospelfellow.com*
*e-mail : gospelfellowsvks@gmail.com*

# பொருளடக்கம்


| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1 | யுத்தத்திற்கு வழி நடத்தும் கர்த்தர் | 1 |
| 2 | யுத்தம் செய்ய அழைக்கும் கர்த்தர் | 6 |
| 3 | யுத்தமும் விடுதலையும் | 11 |
| 4 | யுத்தத்தின் இலக்கு | 20 |
| 5 | யுத்தத்தில் பயப்படாதிருங்கள் | 27 |
| 6 | பிசாசை எதிர்கொள்ளும் யுத்தம் – வாழ்வில் | 33 |
| 7 | பிசாசுக்கு எதிரான யுத்தம் – சபையில் | 37 |
| 8 | யுத்தத்தில் வெற்றி சிறந்த கர்த்தர் | 48 |

# 1. யுத்தத்திற்கு வழி நடத்தும் கர்த்தர்

பிரியமானவர்களே, கிறிஸ்தவ வாழ்க்கை என்பது: இது ஒரு யுத்தம் செய்யும் போர்க்களம் என்பதை நாம் முதலில் அறிந்து கொள்வது நல்லது.

**இயேசு "...என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்றார்"** (யோ 18:36). **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது ஊழிய நாட்களில், உலகத்தில் பிறந்து வளர்ந்தாலும் தமது சீஷரிடத்தில் சொல்லும் போது: "...ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்" என்றார்** (யோ 14:2).

**"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்"** (யோ 14 :2, 3) **என்று சொன்னார்.**

இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டியது நாம் இவ்வுலகத்திற்குரியவர்கள் அல்ல. நாம் காணாத ஒரு தேசத்தை நோக்கி பயணிக்கிறோம். இந்தப் பயணத்தில் நமக்கு விரோதமாகப் போர் செய்கிற எதிரிகள் சாத்தானும் அவனுடைய தூதர்களும் மட்டுமே என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இந்தப் பயணம் இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு கானான் தேசத்தை நோக்கி அணி அணியாய் புறப்பட்டுச் சென்ற நம்முடைய முற்பிதாக்களின் கூட்டத்திற்கு அடையாளமாக இருக்கிறது.

எகிப்தின் அடிமைத்தனத்தில் பழகிப்போன இஸ்ரவேல் ஜனங்கள் அடிமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை அறியாமலும், உணராமலும் இருந்தார்கள். அவர்களின் மனக் கண்கள் குருடாக்கப்பட்டு, எகிப்தியர் தங்கள் கழுத்தின் மேல் வைத்திருந்த நுகத்தடியைக் குறித்து கவலையற்று புசித்துக் குடித்து திருப்தியுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

**கர்த்தர் ஆபிரகாமிடம் உடன்படிக்கைப்பண்ணிச் சொல்லும் போது ''...உன் சந்ததியார் தங்களுடையதல்லாத அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருந்து, அத்தேசத்தாரைச் சேவிப்பார்கள் என்றும், அவர்களால் நானூறு வருஷம் உபத்திரவப்படுவார்கள் என்றும், நீ நிச்சயமாய் அறியக்கடவாய்''என்றார்.** (ஆதி 15 : 13).

**"...கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதி துவங்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும், கேனியரும், கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்".**
(ஆதி 15:18-21)

இஸ்ரவேல் ஜனங்களுக்கு மோசே வழிகாட்டுகிறவனாக முன்னே சென்றான். கர்த்தரோ மோசேக்கு வழிகாட்டுகிறவராக மோசேக்கு முன் சென்றார். மோசேயின் கீழ்படிதலின் மூலமாகத் தான் இஸ்ரவேலருக்கு வெற்றி கிடைத்தது. மோசே கர்த்தர் சொல்லுகிற ஒவ்வொரு வார்த்தைக்கும் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்தான். **''மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தது போல ...'' (எபி.3:2)** என்று தேவனே மோசேயைக் குறித்துச் சாட்சி சொன்னார்.

இன்றைய காலத்தில் பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு சபைக்கும் ஒரு தலைவரை ஏற்படுத்தி, அவர்களின் பிரயாசத்துக்குத் தக்கபடி ஜனக்கூட்டங்களைக் கொடுத் திருக்கிறார். இந்த ஜனங்கள் சபைத் தலைவரைப் பின்பற்றிச் செல்கின்றனர். ஆனால், சபைத்தலைவரோ பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றிச் சென்றால்தான் ஒவ்வொரு ஆத்துமாவையும் பரலோகத்திற்குள் நடத்திச் செல்லமுடியும்.

சபை தலைவர் பரிசுத்த ஆவியானவர் சொல்வதை கவனியாமலும், அவரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமலும் இருந்தால் அவர்கள் நடத்திச்செல்லும் ஆத்துமாக்கள் நிச்சயமாகவே வழி மாறிச் செல்வார்கள் என்பதில் சந்தேக மில்லை. இதற்கு மோசேயின் ஊழியத்தில் நடந்த சம்பவமே நமக்கு முன் உதாரணம். இஸ்ரவேல் ஜனங்களைக் கானான் தேசத்தை நோக்கி நடத்திச்சென்ற போது ஜனங்களுக்குக் குடிக்க தண்ணீர் இல்லாததினால் முறுமுறுத்தார்கள். **“மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: இந்த ஜனங்களுக்கு நான் என்ன செய்வேன், இவர்கள் என்மேல் கல்லெறியப் பார்க்கிறார்களே என்றான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி : நீ இஸ்ரவேல் மூப்பரில் சிலரை உன்னோடே கூட்டிக்கொண்டு, நீ நதியை அடித்த உன் கோலை உன் கையிலே பிடித்துக்கொண்டு, ஜனங்களுக்கு முன்னே நடந்து போ,அங்கே ஓரேபிலே நான் உனக்கு முன்பாகக் கன்மலையின் மேல் நிற்பேன்; நீ அந்தக் கன்மலையை அடி; அப்பொழுது ஜனங்கள் குடிக்க அதிலிருந்து தண்ணீர் புறப்படும் என்றார். அப்படியே மோசே இஸ்ரவேல் மூப்பரின் கண்களுக்கு முன்பாகச் செய்தான்”.** (யாத் 17 : 4-6)

இப்படி இஸ்ரவேல் மூப்பர்களுக்கும், ஜனங்களுக்கும் முன்பாக பெரிய அற்புதங்களைச் செய்த மோசே இன்னொரு முறை இஸ்ரவேலரின் முறுமுறுப்பின் காரணமாக பதறி கர்த்தருடைய வார்த்தையை உதாசீனப்படுத்தி விட்டு கர்த்தரை பரிசுத்தம் பண்ணாமல் (மேன்மைப்படுத்தாமல்) தன் இஷ்டத்தின் படி செயல்பட்டான்.

**“கர்த்தர் மோசேயை நோக்கி: நீ கோலை எடுத்துக் கொண்டு, நீயும் உன் சகோதரனாகிய ஆரோனும் சபையாரைக் கூடிவரச் செய்து, அவர்கள் கண்களுக்கு முன்னே கன்மலையைப் பார்த்துப் பேசுங்கள்; அப்பொழுது அது தன்னிடத்திலுள்ள தண்ணீரைக் கொடுக்கும்; இப்படி நீ அவர்களுக்குக் கன்மலை யிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணி, சபையாருக்கும் அவர்கள் மிருகங்களுக்கும் குடிக்கக் கொடுப்பாய் என்றார்”.**

**(எண் 20 : 7,8)**

**''அப்பொழுது மோசே தனக்குக் கர்த்தர் கட்டளை யிட்டபடியே கர்த்தருடைய சந்நிதியிலிருந்த கோலை எடுத்தான். மோசேயும் ஆரோனும் சபையாரைக் கன்மலைக்கு முன்பாகக் கூடி வரச் செய்தார்கள்; அப்பொழுது மோசே அவர்களை நோக்கி: கலகக் காரரே, கேளுங்கள், உங்களுக்கு இந்தக் கன்மலையிலிருந்து நாங்கள் தண்ணீர் புறப்படப்பண்ணுவோமோ என்று சொல்லி, தன் கையை ஓங்கி, கன்மலையைத் தன் கோலினால் இரண்டுதரம் அடித்தான்; உடனே தண்ணீர் ஏராளமாய்ப் புறப்பட்டது. சபையார் குடித்தார்கள்: அவர்கள் மிருகங்களும் குடித்தது''. (எண் 20 : 7-11)**

கர்த்தர் மோசேயிடம் ஒரு விசை கன்மலையைக் கோலால் அடித்து தண்ணீரைக் குடித்தீர்கள், இனி கன் மலையைப் பார்த்து பேசினாலே போதும், அது தண்ணீர் கொடுக்கும் என்றார். ஆனால், மோசேயோ கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படியாமல் இரண்டு முறை கன்மலையை அடித்தான். **"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்". (எபி 11 : 6)**

இந்தக் காரியத்தில் கர்த்தர் மோசேயின் மேலும் ஆரோனின் மேலும் விசனப்பட்டார். **''பின்பு கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி; இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணும்படி, நீங்கள் என்னை விசுவாசியாமற் போனபடியினால், இந்தச்சபையாருக்கு நான் கொடுத்த தேசத்துக்குள் நீங்கள் அவர்களைக்கொண்டு போவதில்லை என்றார்". ( எண் 20 : 12)**

சபையை நடத்துகிற தலைவர் சபைமக்களின் கண்களுக்கு முன்பாக கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து சரியான பாதையில் சென்றால்தான், சபை மக்களும் கர்த்தரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள். சபைத் தலைவர்

கர்த்தரின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்து செயல்படவில்லை என்றால் சபை மக்களும் சபையின் தலைவருக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள். மோசேயின் தவறுதலினால் இஸ்ரவேல் ஜனங்களை கானானுக்குள் வழி நடத்தும் தகுதியை மோசேயும், ஆரோனும் இழந்துபோனார்கள்.

**“பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இந்த அபாரீம் மலையில் ஏறி, நான் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுத்த தேசத்தைப் பார்: நீ அதைப் பார்த்த பின்பு, உன் சகோதரனாகிய ஆரோன் சேர்க்கப்பட்டது போல, நீயும் உன் ஜனத்தாரிடத்தில் சேர்க்கப்படுவாய்; சபையார் வாக்குவாதம்பண்ணின சீன் வனாந்தரத்தில் தண்ணீருக்கடுத்த விஷயத்தில் அவர்கள் கண்களுக்கு முன்பாக என்னைப் பரிசுத்தம் பண்ணவேண்டிய நீங்கள் என் கட்டளையை மீறினீர்களே என்றார்”. ( எண் 27 : 12-14)**

கீழ்ப்படியாமையின் பிள்ளைகள் மேல் தேவ கோபாக்கினை வரும். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவரை மகிமைப்படுத்துவோம்.

☆☆☆

# 2. யுத்தம் செய்ய அழைக்கும் கர்த்தர்

கிறிஸ்தவ வாழ்க்கை என்பது வனாந்திர வழி. இந்த வனாந்திரத்திலே நமக்குக் கர்த்தர்தான் துணை.

**"உன் தேவனாயிருக்கிற கர்த்தராகிய நான் உன் வலது கையைப்பிடித்து : பயப்படாதே, நான் உனக்குத் துணை நிற்கிறேன் என்று சொல்லுகிறேன்" என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். (ஏசா 41:13).**

எனக்கன்பானவர்களே, நீங்கள் கர்த்தருக்குப் பிரியமாயும், உத்தமமாயும் அவரைப் பின்பற்றினால் நிச்சயமாகவே உங்களுடனே அவர் வருவார். துணையாயும் நிற்பார் என்பதில் சந்தேகமில்லை.

எகிப்திலே அடிமையாய் வாழ்ந்தபடியினாலே இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தங்களைச் சிருஷ்டித்த மெய் தேவனைக் குறித்த அறிவில்லாதிருந்தது. எகிப்தியரின் தெய்வங்களையும், அவர்களின் தெய்வ வணக்க முறைமைகளை மட்டுமே கற்றுக் கொண்டு அவர்களைப் போல வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

**"ஆபிரகாமுக்குக் தேவன் ஆணையிட்டு அருளின வாக்குத் தத்தம் நிறைவேறுங் காலம் சமீபித்த போது". (அப் 7:17)**

**"தேவன் இஸ்ரவேல் புத்திரரைக் கண்ணோக்கினார்; தேவன் அவர்களை நினைத்தருளினார்". ( யாத் 2:25)**

இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தம்மை வெளிப்படுத்த சித்தங்கொண்டார். இதற்காக மோசேயைத் தெரிந்து கொண்டார். மோசேயானவன் தன்னைப் பெற்றெடுத்த தாயை வளர்ப்புத் தாயாக ஏற்றுக் கொண்டு வளர்க்கப்பட்டான்.

**''மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும் கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்'' (அப் 7:22)**

இன்றைக்கும் புற ஜாதிகளிலிருந்துதான் கர்த்தர் தமக் கென்று சாட்சியுள்ள ஊழியர்களை எழுப்பி வல்லமையான காரியங்களைச் செய்யும்படி தெரிந்து கொள்கிறார். இவர்கள் தான் தாங்கள் வணங்கும் தெய்வங்களைப்பற்றிய சகல சாஸ்திரங்கள் மற்றும் மத சடங்குகளைப்பற்றி சரியாய் தெரிந்தவர்களாய் இருப்பார்கள். இவர்கள் மிகுந்த தெய்வபக்தியுள்ளவர்களாய் இருப்பார்கள். இவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் சுவிசேஷத்தைக் கேள்விப்படும் வாய்ப்பைக் கொடுக்கிறார். அவர்கள் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தங்கள் வாழ்க்கையைக் கர்த்தருக்கென்று பிரதிஷ்டை பண்ணுகிறார்கள்.

இவர்கள் இரட்சிக்கப்பட்டபின்பு வேத புஸ்தகத்தைக் கிரமமாக வாசித்து, அதிலிலுள்ள வாக்குத்தத்தங்களைத் தனதாக்கிக் கொண்டு அதில் நிலைத்திருக்கிறார்கள். இவர்கள் தான் கர்த்தருக்கென்று கனி கொடுக்கிறார்கள். இவர்கள் தங்கள் கடந்த கால வாழ்க்கை முறைகளைச் சாட்சியாகச் சொல்லி, நிகழ்கால தங்களுடைய கிறிஸ்துவுக்குள்ளான ஜீவியத்தையும் சுட்டிக்காட்டி மற்றவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் மூலம் கிறிஸ்துவைப் பின்பற்ற அழைப்புக் கொடுக்கிறார்கள்.

இவர்கள் இயேசுவைத் தன்னுடைய சொந்த சரீரத்தைப் போல நேசிப்பவர்களாயிருப்பார்கள். இயேசுவும் இவர்களைத் தன்னுடைய சரீரத்தின் அவயவமாய் ஏற்றுக்கொண்டு பயன்படுத்துகிறார்.

**இவர்கள் தற்புகழ்ச்சியை விரும்பமாட்டார்கள்.**
**கிறிஸ்துவின் மகிமையை மட்டும் தேடுவார்கள்,**
**இந்த உலகத்தின் மேன்மையை விரும்பமாட்டார்கள்.**
**பரலோகத்தில் இயேசு இவர்களுக்கென்று ஆயத்தம்பண்ணி வைத்திருப்பவைகளையே நாடுவார்கள்.**

**எதையும் சகித்துக்கொள்வார்கள்.**
**பொறாமைப்படமாட்டார்கள்.**
**எதற்கும் அடிமையாகமாட்டார்கள்.**
**எதையும் இச்சிக்கமாட்டார்கள்.**
**எதிலும் தனித்துவத்தையே விரும்புவார்கள்.**
**எந்தச் சூழ்நிலையிலும் இயேசுவை மட்டுமே மட்டுமே சார்ந்து கொள்வார்கள்.**

மோசேக்கு வளர்ப்புத்தாயாக இருந்த, அவனை பெற்றெடுத்த தாயானவள், தேவனுடைய குணாதிசயங்களையும், அவருடைய வல்லமையான செயல்களையும் சொல்லி, இஸ்ரவேலர் நம்முடைய சகோதரர்கள் என்றும், நாம் எகிப்து தேசத்தார் அல்லவென்றும் சகோதரத்துவத்தின் அன்பை நினைப்பூட்டினதினால்தான், தான் எகிப்தியன் அல்ல என்பதை அறிந்து இஸ்ரவேலருக்கு உறுதுணையாய் நிற்க விரும்பினான்.

**"...மோசே தான் பெரியவனான போது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்".**
**(எபி 11: 24-26)**

மோசே எகிப்திய இளவரசன்! அடுத்து பட்டத்துக்கு வரப் போகிற ராஜா!! ஆனாலும் மோசே அதை விரும்பவில்லை. வேதம் சொல்லுகிறது: "**உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவை களல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்".**
**(1யோ 2:15-17)**

**“இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது”.**
**(1கொரி 13:13)**

தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பதெல்லாம் சிலுவையிலே தன்னை ஒப்புக்கொடுத்து இரத்தம் சிந்திய இயேசுவின் மேல் அன்பு கூர வேண்டும் என்பதே. இந்த அன்புதான் நம்மை தேவனுடைய ஊழியத்தைச் செய்ய ஏவுகிறது. பரலோகத்தில் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதும் இந்த அன்புதான். தேவனுடைய அன்பு ஒருவனுக்குள் நிலைத்திருக்கும் போது, அந்த அன்பு அவனுக்குள் அக்கினியாய் பற்றி எரிந்து மற்றவர்களுக்கும் பரவுகிறது. வேதம் சொல்லுகிறது: **“இதோ நான் உன் வாயிலிட்ட என் வார்த்தைகளை அக்கினியும், இந்த ஜனத்தை விறகும் ஆக்குவேன்’’. (எரே. 5 : 14)** நீங்கள் கிறிஸ்துவின் அன்பினால் நிறைந்திருந்தால் உங்கள் வாயிலிருந்து புறப்படுகிற வேதவசனம் மற்றவர்களையும் கிறிஸ்துவின் அன்பினால் எரியப்பண்ணும்.

மோசே எகிப்திலே பிறந்து எகிப்தியருடைய சகல பழக்க முறைகளை அறிந்து, அதின்படி நடந்து, எகிப்து தேசத்திலே பெரியவனாயிருந்தும் அந்த வாழ்க்கையை அவன் வெறுத்துத் தள்ளினான். தங்கள் சகோதரராகிய இஸ்ரவேல் ஜனங்களின் தேவனாகிய கர்த்தரை அவர்தான் தன்னுடைய தேவன் என்று அறிந்ததினாலேயே இஸ்ரவேல் ஜனங்களுடன் கர்த்தரைப் பின்பற்றினான். ஆகையால் கர்த்தர் தன்னுடைய ஜனங்களை வழி நடத்த மோசேயைத் தெரிந்தெடுத்தார்.

இன்றைக்கும் பரிசுத்த ஆவியானவர் புறஜாதி களிலிருந்து பக்தி வைராக்கியமுள்ளவர்களைப் பிரித்தெடுத்து ஊழியத்தில் வல்லமையாய் பயன்படுத்தி வருகிறார்.

மோசேயின் மேல் பிரியம் கொண்ட தேவன், எரிகிற முட் செடியிலிருந்து அவனை அழைத்தார். **"அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக் கிறேன். அவர்களை எகிப்தியரின் கைக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும், ஏத்தியரும், எமோரியரும் பெரிசியரும் ஏவியரும், எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும், தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன். இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்தியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்குகிற ஒடுக்குதலையும் கண்டேன். நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்". (யாத் 3:7-10)**

பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கும் இந்த அழைப்பைக் கொடுக்கிறார். உன்னை அனுப்புகிறேன் வா என்கிறார். உன் உள்ளத்திற்குள் அவருடைய குரல் நிச்சயமாகவே ஒலித்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் கீழ்ப் படிந்தால் உங்களையும் அனுப்பி வல்லமையாய் பயன் படுத்துவார்.

★ ★ ★

# 3. யுத்தமும் விடுதலையும்

எகிப்தியர் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவைகளையும், தங்களுடைய கைகளின் கிரியைகளையும் வணங்கி தேவனுக்குக் கோபமூட்டிக்கொண்டிருந்தார்கள். அது சாத்தானும், அவனுடைய தூதர்களும் குடியிருக்கும் இராஜ்யமாயிருந்தது. அந்த இராஜ்யத்தில் இஸ்ரவேல் புத்திரரை சாத்தான் சிறைப்படுத்தி நெருக்கி வைத்திருந்தான். இஸ்ரவேல் ஜனங்கள் மெய்தேவனை அறியாமல் வாழ்ந்தபடியால் அவர்களின் கண்களுக்கு முன்பாக எகிப்திய தேவர்கள் மேல் தேவன் தம்முடைய அதிகாரத்தை செலுத்தி அவர்களை எகிப்தியரின் பிடியிலிருந்து விடுவிக்க விரும்பினார்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களாகிய மோசே யோடும், ஆரோனோடும், எகிப்தின் இராஜாவாகிய பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி எகிப்து தேசத்தில் என் அடையாளங்களையும், அற்புதங்களையும் மிகுதியாய் நடப் பிப்பேன் என்றார்.

**"கர்த்தர் மோசேயையும், ஆரோனையும் நோக்கி: உங்கள் பட்சத்திற்கு ஒரு அற்புதம் காட்டுங்கள் என்று பார்வோன் உங்களோடே சொன்னால்: அப்பொழுது நீ ஆரோனை நோக்கி: உன் கோலை எடுத்து அதைப் பார்வோனுக்கு முன்பாகப் போடு என்பாயாக; அது சர்ப்பமாகும் என்றார். மோசேயும், ஆரோனும் பார்வோனிடத்தில் போய், கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி செய்தார்கள். ஆரோன் பார்வோனுக்கு முன்பாகவும் அவன் ஊழியக்காரருக்கு முன்பாகவும் தன் கோலைப் போட்டான், அது சர்ப்பமாயிற்று. அப்பொழுது பார்வோன் சாஸ்திரிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான். எகிப்தில் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச்செய்தார்கள். அவர்கள் ஒவ்வொருவனாகத் தன் தன் கோலைப் போட்ட போது, அவைகள் சர்ப்பங்களாயின; ஆரோனுடைய கோலோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று". ( யாத். 7:8-12)**

சாத்தானுடைய வல்லமையைவிட கர்த்தருடைய வல்லமை பெரியது என்பதை முதலாவது தேவன் தம்முடைய ஊழியக்காரர்கள் மூலமாக நிரூபித்துக்காட்டினார்.

**ஒரு சமயம் நான் என்னுடைய தனிப்பட்ட ஜெபத்தில் மந்திரவாதிகளுக்காகவும், அவர்கள் ஏவிவிடும் மந்திர சக்திகளுக்காகவும், அந்தக் கிரியைகள் இயேசுவின் நாமத்தில் அழிக்கப்படும்படி தொடர்ந்து ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தேன். அந்த நாட்களில் ஆவியானவர் ஒரு சொப்பனத்தின் மூலம் மாந்ரீகத்தின் வல்லமையைக் குறித்து விளக்கிக் காண்பித்தார். நான் ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் செல்ல, கிராமங்களில் ஒற்றையடி பாதையென்று சொல்லுவார்கள், அந்தப் பாதையின் வழியாக நடந்து சென்றேன். ஒரு நபர் மட்டும் தான் அதில் நடந்து செல்லமுடியும். எதிர் புறத்திலிருந்து வரும் நபர் பாதையை விட்டு விலகிதான் வரமுடியும். அப்படிப்பட்ட பாதை வழியாக நடந்து சென்று கொண்டிருந்தேன். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நடந்து செல்லும் போது வலது புறம் ஒரு பெண்ணும், இடது புறத்தில் ஒரு ஆண் ஆகிய இருவரும் சேர்ந்து பாதையின் மத்தியில் பூஜை பொருட்களை வைத்து மந்திரம் செய்து கொண்டிருந்தார்கள். நான் நடந்து செல்வதற்கு வழி இல்லாத படியினால் அந்த நிமிஷம் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணி ஆண்டவரே நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டேன். உடனே ஆவியானவர் என் நாவை அன்னிய பாஷையில் ஜெபிக்கத் தூண்டினார். ஜெபித்த உடனே ஆவியானவர் என்னோடு பேசினார்: அந்த பூஜை பொருள்களின் மேல் உன் வலது காலை வைத்து மிதி என்றார். நானும் அப்படியே செய்தேன். தொடர்ந்து நடந்து போ நிற்காதே என்று கட்டளை கொடுத்தார். நானும் அப்படியே செய்தேன்.**

**''யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை; இஸ்ரவேலுக்கு விரோதமான குறி சொல்லுதலும் இல்லை''. (எண் 23:23)**

இன்றைக்கு அநேக விசுவாசிகள் எங்கள் தொழிலுக்கு விரோதமாக, வியாபாரத்திற்கு விரோதமாக, குடும்ப ஒற்றுமைக்கு விரோதமாக யாரோ மந்திரம் செய்கிறார்கள் என்று ஊழியக் காரர்களிடம் ஜெபிக்க வருகிறார்கள். மந்திரத்தை அகற்ற மந்திர வாதிகளிடத்திலும் செல்லுகிறார்கள். ஆனாலும் முடிவு தெரியாமல் தடுமாறுகிறார்கள். எனக்கன்பான கர்த்தருடைய பிள்ளையே நீ யாரிடமும் போக வேண்டியதில்லை. **சிலுவையிலே உனக்காக தன் ஜீவனை விட்ட இயேசுவிடம் போ. அவரே உனக்கு அடைக்கலம். ''உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்''. (ஏசா. 54:17)**

ஆம், மோசேயின் கோல் மந்திரவாதிகளின் கோல்களை விழுங்கிற்று. நம்முடைய ஆதி தகப்பனையும், தாயையும் வஞ்சித்த முதல் சூன்யத்தின் ஆவி சர்ப்பமே; ஆகையால்தான், முதலில் சர்ப்பத்தின் ஆவியைக் கர்த்தர் நியாயம் தீர்த்தார். தேவனுடைய சிருஷ்டிப்புகள் தேவனின் அதிகார வரம்புக்குட் பட்டவைகள் என்பதை எகிப்தியரும், இஸ்ரவேலரும் அறிந்து கொள்ளும்படியாக கர்த்தர் தம்முடைய கிரியைகளை எகிப்திலே துவக்கினார்.

**"மேலும், கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனிடத்தில் உன் கோலை எடுத்துக்கொண்டு எகிப்தின் நீர்நிலைகளாகிய அவர்கள் வாய்க்கால்கள்மேலும் நதிகள்மேலும் குளங்கள்மேலும் தண்ணீர் நிற்கிற எல்லா இடங்கள்மேலும், அவைகள் இரத்தமாகும் படிக்கு, உன் கையை நீட்டு; அப்பொழுது எகிப்து தேசம் எங்கும் மரப்பாத்திரங்களிலும், கற்பாத்திரங்களிலும் இரத்தம் உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்.**

**''கர்த்தர் கட்டளையிட்டபடி மோசேயும் ஆரோனும் செய்தார்கள்; பார்வோனுடைய கண்களுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் கோலை ஓங்கி, நதியிலுள்ள தண்ணீரை அடிக்க, நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப்போயிற்று. நதியின் மீன்கள் செத்து, நதி நாறிப் போயிற்று: நதியின் தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்குக் கூடாமற் போயிற்று; எகிப்து தேசம் எங்கும் இரத்தமாயிருந்தது''. (யாத் 7:19-21)**

தேவனின் சிருஷ்டிப்பாகிய நீர் நிலைகள் தேவனுடைய சிருஷ்டிப்பு என்பதை ஜனங்கள் அறியாமல் இருக்கிறார்கள். ஆகையால்தான் அவைகளை வணங்குகிறார்கள். நீரில் வாழும் சகல உயிரினங்கள் மேலும் தமது நீதியைச் செலுத்தி, உருவாக்கவும், அழிக்கவும் தானே வல்லமையுள்ளவர் என்பதை நிரூபித்தார்.

பேன்கள், வண்டுகள், சகல மிருகங்கள் மேலும் தமது நீதியைச் செலுத்தி தமது ஊழியக்காரர்களாகிய ஆரோனோடும், மோசேயோடும் இருந்து, "...**எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை...". (யாத் 8:10)** என்று அவர்களுடைய வார்த்தையின் மூலம் எகிப்து தேசத்தில் மகிமைப்பட்டார்.

எகிப்தியருக்கும், இஸ்ரவேலருக்கும் வித்தியாசத்தை உண்டாக்கினார். "...**எகிப்தியருடைய மிருக ஜீவன்கள் எல்லாம் செத்துப் போயிற்று ; இஸ்ரவேல் புத்திரரின் மிருகஜீவன்களில் ஒன்றாகிலும் சாகவில்லை" (யாத் 9 : 6)** என்ற வித்தியாசத்தை உண்டு பண்ணினார். "**...ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது" (லூக். 10:19) என்ற வார்த்தை நிறைவேறிற்று.**

இன்னும் சொல்லப் போனால்:

**கொள்ளை நோய், சகல வாதைகள்**
**அக்கினி, இடி மின்னல்**
**மகா இடி முழக்கம்**
**மழை, கல்மழை**
**காரிருள், வெளிச்சம்**
**மரம், செடி, கொடிகள்**

சகலத்தின் மேலும் தமக்கு அதிகாரமுண்டு என்பதைக் கர்த்தர் அந்நாளிலே எகிப்திலே நடப்பித்துக் காட்டினார். சகலத்தையும் சிருஷ்டிக்கவும் அழிக்கவும் தனக்கு மட்டுமே வல்லமை உண்டு என்பதையும் நிரூபித்து, **"...அதினால் பூமி கர்த்தருடையது..." (யாத் 9:29)** என்பதை எகிப்தியரும், இஸ்ரவேலரும் அறியும்படி செய்தார்.

**"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: இன்னும் ஒரு வாதையைப் பார்வோன்மேலும் எகிப்தின்மேலும் வரப்பண்ணு வேன்..." (யாத் 11:1). ''அப்பொழுது சிங்காசனத்தில் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் ஏந்திரம் அரைக்கும் அடிமைப் பெண்ணுடைய தலைப்பிள்ளைவரைக்கும், எகிப்து தேசத்திலிருக்கிற முதற் பேறனைத்தும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தும் சாகும் என்று உரைக்கிறார் என்று சொன்னது மன்றி, அதினால் எகிப்து தேசம் எங்கும் முன்னும் பின்னும் ஒருக்காலும் உண்டாகாத பெரிய கூக்குரல் உண்டாகும். ஆனாலும் கர்த்தர் எகிப்தியருக்கும், இஸ்ரவேலருக்கும் பண்ணுகிற வித்தியாசத்தை நீங்கள் அறியும்படிக்கு; இஸ்ரவேல் புத்திரர் அனைவருக்குள்ளும் மனிதர்முதல் மிருகஜீவன்கள் வரைக்கும் ஒரு நாயாகிலும் தன் நாவை அசைப்பதில்லை". (யாத் 11:5-7)** என்று சொல்லும்படி மோசேயையும், ஆரோனையும் பார்வோனிடம் அனுப்பினார். கர்த்தர் சொன்னபடியே, **"நடு ராத்திரியிலே சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கும் பார்வோனுடைய தலைப்பிள்ளைமுதல் காவல் கிடங்கிலிருக்கும் சிறைப்பட்டவனின் தலைப்பிள்ளைவரைக்கும், எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தையும் மிருகஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார்.**

**" அப்பொழுது பார்வோனும் அவனுடைய சகல ஊழியக் காரரும் எகிப்தியர் யாவரும் இராத்திரியிலே எழுந்திருந்தார்கள்; மகா கூக்குரல் எகிப்திலே உண்டாயிற்று; சாவில்லாத ஒரு வீடும் இருந்ததில்லை" (யாத்.12 : 29,30).** இப்படித்தான் எகிப்தில் தம்முடைய நியாயத்தீர்ப்பைச் செலுத்தினார்.

வேதாகமத்தில் எழுதியிருப்பவைகளெல்லாம் ஆவிக்குரியவை.

| | | |
|---|---|---|
| **1. எகிப்து என்பது** | **:** | **நாம் வாழும் உலகம்** |
| **2. அடிமைத்தனம் என்பது** | **:** | **சாத்தான் சொல்வதைச் செயல்படுத்துவது.** |
| **3. பார்வோன் என்பது** | **:** | **சாத்தான்** |
| **4. பார்வோனின் ஊழியக்காரர்கள் என்பது** | **:** | **சாத்தானுடைய தூதர்கள்** |
| **5. எகிப்தியர் என்பது** | **:** | **உலக ஜனங்கள்** |
| **6.இஸ்ரவேலர் என்பது** | **:** | **ஆபிரகாமின் சந்ததி, தேவ ஜனங்கள்.** |
| **7.தேவனுடைய திட்டம்** | **:** | **உலகத்திலிருந்து தேவ ஜனங்களைத் தமக்கென்று பிரித்தெடுத்தல்.** |

தேவன் தம்முடைய ஜனங்களை உலக அடிமைத்தனமாகிய தேவனல்லாதவைகளின் வணக்கமுறை, உலகத்தின் இச்சை, அசுத்தம், காமவிகாரம், இந்த உலகவாழ்வுதான் முடிவு என்ற அறியாமையிலிருந்து வெளியே வர வேண்டும் என்பதற்காகவே உலகத்தில் அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து, தம்முடையவர்களை இந்த உலக வாழ்வு முடிவல்லவென்றும், இந்த உலகத்தில் மரித்த பின்பு ஆவிக்குரிய நித்திய வாழ்வு உண்டென்று அறிந்து, இந்த நித்திய வாழ்வை நாம் அடைய வேண்டும் என்பதற்காகவே தேவன் நம்மை அழைக்கிறார்.

இந்த உலகத்தில் வாழும் மனுஷன் முதற்கொண்டு, மிருகங்களும் மற்ற ஜீவராசிகளும் மண்ணினாலேயே உருவாக்கப்பட்டவை என்று வேதம் சொல்லுகிறது. **“தேவனாகிய கர்த்தர் வெளியின் சகலவித மிருகங்களையும், ஆகாயத்தின் சகல விதப் பறவைகளையும் மண்ணினாலே உருவாக்கி, ஆதாம் அவைகளுக்கு என்ன பேரிடுவான் என்று பார்க்கும்படி அவைகளை அவனிடத்தில் கொண்டு வந்தார்”. (ஆதி.2:19)**

இந்த வசனத்தின்படி சகலமும் மண்ணினாலே உருவாக்கப்பட்டது. மரித்த பின் மண்ணுக்கே திரும்புகிறது. ஆனால் மனுஷனுடைய சரீரம் மண்ணுக்குத் திரும்பினாலும், ஆவி சிருஷ்டித்த தேவனிடம் செல்லவேண்டும். மனிதன் ஆவி, ஆத்துமா, சரீரம் என்ற மூன்று தத்துவமுடையவன். ஆகையால் சரீரம் மண்ணுக்குத் திரும்பினாலும் ஆவியும், ஆத்துமாவும் பரலோகம் செல்லவே சிருஷ்டிக்கப்பட்டான்.

வேதம் சொல்லுகிறது: **“எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது: எல்லாம் மண்ணிலே உண்டாகிறது, எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது”. (பிர 3:20)**

**‘‘தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்”. (ஆதி 2:7)**

மனுஷனுடைய ஆவியும், ஆத்துமாவும் ஜீவ சுவாசத்தைக் கொடுத்த தேவனிடமே செல்லவேண்டும். மனுஷனைக் குறித்து வேதம் சொல்லுகிறது: **“உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும், தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்’’? (பிர 3:21).** மிருகங்களுக்கு ஆத்துமா இல்லை, ஆகையால் அவைகள் மரித்தபின் மண்ணுக்கே திரும்புகிறது. மனுஷனுக்கு ஆத்துமா உண்டு. அந்த ஆத்துமாவும், ஆவியும் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவேண்டும். அங்கே தேவனோடு நாம் வாழவேண்டும். ஆனால், பாவம் செய்த ஆத்துமா சாகும் என்று வேதம் சொல்லுகிறது.

மரித்த ஆத்துமா உயர ஏறி மோட்சத்திற்கு செல்ல முடியாது. பாவம் செய்து மரித்த ஆத்துமாவின் மேல் உயிரோடே இருக்கும்போதும், மரித்தபின்பும், சாத்தானுக்கு அதிகாரம் இருக்கிறது. ஆகையால், பாவம் செய்த மனிதனை சாத்தானும் அவனுடைய தூதர்களும் ஆட்சி செய்கின்றன. சாத்தானுக்கு இன்னொரு பெயர் மரணத்துக்கு அதிகாரி. பாவத்தினால் மரித்த நம்முடைய ஆத்துமா உயர ஏறினாலும் சாத்தான் சிறைப்படுத்தி பாதாளத்துக்குக் கொண்டுபோய் விடுவான்.

**ஒரு சமயம் என் ஊழியத்தில் நடந்த சம்பவத்தை இந்த இடத்தில் கொண்டு வருகிறேன் பாருங்கள். அசுத்த ஆவி பிடித்திருந்த ஒரு மனிதனுக்கு ஜெபம் பண்ணும்படியாக நானும் இன்னொரு சகோதரனும் சென்றோம். நான் ஜெபிக்க ஆரம்பித்த உடன் அந்த ஆவி அவனை அலைக்கழித்து பின்பு என்னோடே பேச ஆரம்பித்தது. தன்னை ஒளியின் தூதன் என்று அறிமுகப் படுத்தியது. நான் ஊழியத்திற்கு வந்த புதிது. இயேசுவின் நாமத்தில் போ என்று கட்டளை கொடுத்தேன். அந்த ஆவியோ உனக்கு வல்லமையில்லை என்று பேசியது. நான் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் நிறைந்து ஜெபித்துக் கொண்டிருந்தேன். எனக்கு ஒரே குழப்பம். உடனே ஆண்டவரே நான் என்ன செய்யவேண்டும் என்று என் மனதுக்குள்ளே ஜெபித்தேன். ஆவியானவர் என்னோடே பேசினார்: எனக்கு வல்லமையில்லை, இயேசுவின் நாமத்தில் உன்னை எதிர்க்கிறேன். நீ இவனை விட்டுப் போ என்று சொல் என்றார். நானும் ஆவியானவர் சொன்னபடி கட்டளை கொடுத்தேன். உடனே இந்த உலகத்தில் உள்ளதெல்லாம் எனக்குரியவைகள். நீ என்னை விழுந்து பணிந்து கொள். நீ விரும்புகிறவைகளை உனக்குத் தருவேன் என்று அவனுக் குள்ளிருந்து பேசியது அந்த ஆவி. இப்பவும் ஆண்டவரே, நான் என்ன செய்ய என்றேன், ஆவியானவர் சொன்னார்: பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது என்று சொல் என்றார். நானும் அப்படியே சொல்லிவிட்டு நீ இயேசுவின் மூலம் சிலுவையிலே முதுகெலும்பு முறிக்கப்பட்ட பாம்பு. உனக்கு கொடுக்கவும் முடியாது, எடுக்கவும் முடியாது. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது என்றேன்.**

**அந்த மனிதனுக்குள்ளிருந்த அந்த ஆவியோ மறுபடியும் பேசியது. நான் இவனை பத்து வயதிலிருந்து பிடித்திருக்கிறேன். இவனைக் கொல்லாமல் போகமாட்டேன். நானே மரணத்துக்கு அதிகாரி என்று சொன்னது. நான் மீண்டும் தேவனுடைய முகத்தையே தேடினேன். ஆவியானவர் சொன்னார்: நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமா யிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்று சொல் என்றார். நானும் அப்படியே சொன்னேன். அந்த ஆவி அந்த மனிதனை விட்டு விலகியது.**

ஆம் பிரியமானவர்களே, பாவத்துக்கு அடிமையாயிருக்கிற மனிதன் மரித்தவுடன் அவனுடைய ஆவி உயரே எழும்பினாலும், மரித்த ஆத்துமாவின் மேல் சாத்தானுக்கு அதிகாரம் இருக்கிறபடியால், அந்த ஆத்துமாவை சாத்தான் பாதாளத்துக்குக் கொண்டு போய்விடுவான்.

அன்பானவர்களே, இதிலிருந்து நீங்கள் தப்பவேண்டும் என்று நம்மைச் சிருஷ்டித்த தேவன் விரும்புகிறார். இதற்காகவே தேவன் தம்முடைய ஊழியக்காரர்களை உலகத்தில் அனுப்புகிறார். சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறது. வேதம் சொல்லுகிறது:

**“...காதுள்ளவன் கேட்கக் கடவன்...”( வெளி 2 : 29)**

**“விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக் கடவன்”. (வெளி 22 : 17)**

**“இதோ சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியை களின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது”. (வெளி. 22:12)**

**“ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்;”.**

**(வெளி. 22:17)**

★ ★ ★

# 4. யுத்தத்தின் இலக்கு

தேவன் எகிப்திலே தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணினதினால் இஸ்ரவேல் ஜனங்கள் மெய் தேவனை விசுவாசித்து, தேவன் வாக்குப்பண்ணின பாலும், தேனும் ஓடுகிற கானான் தேசத்தை நோக்கி தங்களுடைய இருதயத்தை திருப்ப ஆரம்பித்தார்கள். **“அப்பொழுது மோசே இஸ்ரவேல் மூப்பர் யாவரையும் அழைப்பித்து; நீங்கள் உங்கள் குடும்பங்களுக்குத் தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்துக் கொண்டு, பஸ்காவை அடித்து, ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்துக் கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள். விடியற்காலம்வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டுவாசலை விட்டுப் புறப்படவேண்டாம். கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற் சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகி கடந்து போவார். இந்தக் காரியத்தை உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நித்திய நியமமாகக் கைக் கொள்ளக்கடவீர்கள். கர்த்தர் உங்களுக்கு தாம் சொன்னபடி கொடுக்கப் போகிற தேசத்திலே நீங்கள் போய்ச்சேரும் போது, இந்த ஆராதனையை கைக்கொள்ளக்கடவீர்கள்”என்றார்.**
**(யாத் .12 : 21 – 25)**

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசம் என்பது கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்க்கை. பாலும் தேனும் ஓடுகிற தேசம் என்பது வேத வசனத்தின் மூலம் கிடைக்கும் ஆசீர்வாதமான வாழ்க்கை.

மனுஷ குமாரனாயிருந்த இயேசு கிறிஸ்துவுக்குள் அவர் பரிசுத்த ஆவியினாலே ஜெனிப்பிக்கப்பட்டதினால் வாக்குப் பண்ணப்பட்ட தேசம் அவருக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அவர் பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவரால் அனுமதிக்கப்பட்டிருக்கையில், **''அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்''. (மத் 4:2-4)**

பிசாசு இயேசுவினிடம் காணக்கூடியவைகளைச் சொல்லுகிறான். இயேசுவோ, தேவனுடைய வார்த்தையின் மூலம் பரலோகத்தில் இருந்து வருகிற நன்மைகளைத் தேவன் எனக்குத் தந்து அதன் மூலம் என்னைப் போஷிப்பார் என்று சொன்னார்.

**"...காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்". (ரோமர் 8:24,25)**

ஏவாள் சோதிக்கப்படும்போது பார்வைக்கு இன்பமும் புசிப்புக்கு ஏற்றதும் என்று கண்டு, பறித்து, புசித்துத் தன் புருஷனுக்குக் கொடுத்தாள் என்று எழுதப்பட்டுள்ளது. சாத்தானுடைய வார்த்தையைத் தோற்கடிக்க, தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்தி ஜெயமெடுத்தார் இயேசு. இயேசுவைப் போல ஒவ்வொரு தேவபிள்ளையும் தேவன் நமக்கு வாக்குப் பண்ணிய வார்த்தைகளைப் பயன்படுத்தி, பரலோகத்திலிருந்து தேவைகளைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். சாத்தானை தோற்கடிக்க வேண்டும்.

**"...நீங்கள் உங்கள் குடும்பங்களுக்குத்தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்துக் கொண்டு...". (யாத்12:21)** என்று எழுதப்பட்டுள்ளது. கிறிஸ்துவுக்குள்ளான வாழ்க்கை என்பது பரிசுத்த ஆவியானவர் மூலமாக கிறிஸ்துவுக்குள் ஒரே குடும்பம். கிறிஸ்துவுக்குள்ளான குடும்பம் என்பது: உலகம் முழுவதும் மனந்திரும்பி இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டக் கூட்டம். அதுதான் சபை. இயேசுவே பலியிடப்பட்ட அந்த ஆட்டுக்குட்டி. **"...ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக் கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்...". (யாத்12:22)** என்று சொல்லப்பட்டிருக்கிறது.

நம்முடைய ஆத்துமா குடியிருக்கும் வீடு நம்முடைய சரீரம். நம்முடைய சரீரம் பாவத்தினால் மரித்துப் போயிருப்பதால், நம்முடைய ஆத்துமா சரீரத்திற்குள் சிறைப்பட்டுக் கிடக்கிறது. அது விடுதலையாக வேண்டும் என்றால், நம்முடைய இருதயத்தின் நிலைக்கால்களில் இயேசுவின் இரத்தம் பூசப்படவேண்டும். இயேசுவின் இரத்தம் பூசப்பட்ட நம்முடைய சரீரத்தைச் சங்காரக்காரன் தொடமுடியாது. இரத்தத்தைப் பூச நாம் நம்மை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் அதைச் செய்வார்.

நம்முடைய ஆத்துமா விடுதலையின் அனுபவத்தைப் பெற்றபின் அது பரலோகத்தை நோக்கி பயணிக்கிறது. அந்த ஆத்துமாவைத் தேவனுடைய வார்த்தைக் கட்டுப்படுத்துகிறது. வார்த்தையை மீறும்போது சாத்தான் மூலம் பாவத்தில் தள்ளப் படுகிறது. இந்த அனுபவத்தின் முன் அடையாளமாகத்தான் எகிப்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்தை நோக்கி பயணமாவதை வேதாகமம் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

கர்த்தர் ஒரு மனிதனை இரட்சித்தவுடன் உலகம், மாமிசம், பிசாசு இந்த ஆவிகளோடு யுத்தம் செய்யும்படி பழக்கு விக்கிறார். இந்த யுத்தத்தில் பரிசுத்த ஆவியானவர் நம்முடன் கூட இருப்பார். நம்முடன் இருக்கும் ஆவியானவரைக் குறித்து எந்த அளவுக்கு நாம் அறிந்திருக்கிறோமோ அந்த அளவின்படி தான் நமக்கு ஜெயம் கிடைக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைக் குறித்த அறிவு வேதவசனத்தின் மூலமாகத்தான் நமக்குக் கிடைக்கிறது. அதினால்தான் வேதாகமத்தை வாசிக்கும் பொழுது, பகுதி பகுதியாக பிரித்து அதை வாசித்துத் தியானித்துப் பழக வேண்டும். அப்பொழுது அந்தந்த பகுதிகளின் காட்சிகளை பரிசுத்த ஆவியானவர் நம் இருதயத்தில் பதித்து விடுவார். அந்தக் காட்சிகளையும், அதைச் சார்ந்த தேவனுடைய வார்த்தையையும் விசுவாசித்து ஜெபிக்கும்போது சாத்தானுடைய அரண்கள் விழுந்து விடும். ஆவியானவர் அடுத்தப் பகுதிக்கு நம்மை அழைத்துச் செல்வார்.

**"...பார்வோன் ஜனங்களைப் போகவிட்டபின்: ஜனங்கள் யுத்தத்தைக் கண்டால் மனமடிந்து, எகிப்துக்குத் திரும்புவார்கள் என்று சொல்லி; பெலிஸ்தரின் தேசவழியாய் போவது சமீபமானாலும், தேவன் அவர்களை அந்த வழியாய் நடத்தாமல், சிவந்த சமுத்திரத்தின் வனாந்தர வழியாய் ஜனங்களைச் சுற்றிப் போகப் பண்ணினார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து அணியணியாய்ப் புறப்பட்டுப் போனார்கள்". ( யாத் 13 : 17,18)**

இஸ்ரவேலர் எகிப்தை விட்டுப் புறப்பட்டவுடன் மகிழ்ச்சியோடு தான் வந்து சேர்ந்தார்கள். ஆனால் செங்கடல் அவர்களை தடை செய்தது. தேவனே இப்படிப்பட்ட நெருக்கடியை இஸ்ரவேலுக்கு ஏற்படுத்தினார். கர்த்தர் மோசேயினிடம் சொல்லும் போது: **"...அவர்கள் தேசத்திலே திகைத்துத் திரிகிறார்கள்; வனாந்தரம் அவர்களை அடைத்துப் போட்டது என்று பார்வோன் சொல்லுவான். ஆகையால் பார்வோன் அவர்களைப் பின்தொடரும்படிக்கு, நான் அவன் இருதயத்தைக் கடினப்படுத்தி,**

**நானே கர்த்தர் என்பதை எகிப்தியர் அறியும்படி, பார்வோனாலும் அவனுடைய எல்லா ராணுவத்தாலும் மகிமைப்படுவேன் என்றார்...“ (யாத் 14 : 3,4)**

**“...எகிப்தியர் பார்வோனுடைய சகல குதிரைகளோடும் இரதங்களோடும் அவனுடைய குதிரைவீரரோடும் சேனைகளோடும் அவர்களைத் தொடர்ந்துபோய், சமுத்திரத் தண்டையிலே பாகால்செபோனுக்கு எதிரே இருக்கிற ஈரோத் பள்ளத்தாக்கின் முன்னடியிலே பாளையமிறங்கியிருக்கிற அவர்களைக் கிட்டினார்கள்”. (யாத் 14 : 9)**

ஜனங்கள் பயந்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். ஆம், எதிரியாகிய சாத்தானையும் அவனுடைய சேனைகளையும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தின் மூலம் நாம் வெற்றி பெறும்போது பரலோகமே மிகுந்த சந்தோஷமடைகிறது.

இயேசுவின் மரணத்திலும் அவரின் உயிர்த்தெழுதலிலும் நாம் சார்ந்து கொள்ளும்போது மட்டுமே நமக்கு வெற்றி கிடைக்கிறது. இயேசு சிலுவையிலே நடத்தி முடித்த பெரிய யுத்தத்தில் சாத்தானை ஜெயித்தார். அடித்து வீழ்த்தப்பட்ட சத்துரு வாகிய (பிசாசு) வலுசர்ப்பம், முதுகு ஒடிக்கப்பட்டதினாலே வால் மூலமாகவே இன்றைக்கு ஊழியர்களையும், விசுவாசிகளையும் கீழே தள்ளுகிறான்.

கர்த்தருடைய பிள்ளைகளுக்கு வேத அறிவு இல்லை என்றால் சாத்தான் நம்மை எளிதில் மடங்கடித்து விடுவான். அதினால்தான் தினசரி வேதவாசிப்பு ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைகளின் வாழ்க்கையில் இருக்க வேண்டியது கட்டாயமாகிறது. வேத அறிவு இல்லாதவர்களை பிசாசு பொய் தீர்க்க தரிசனத்தின் மூலமாக எளிதாய் ஏமாற்றி விடுவான். அவர்கள் வஞ்சிக்கப்பட்டு சாத்தானை பின்பற்றிச் செல்லக்கூடிய வாய்ப்புண்டு.

வேதம் சொல்லுகிறது: **''பொய்ப்போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால்''. ( ஏசா 9:15)** ஆம் பொய்ப் போதகம், பொய்த் தீர்க்கதரிசனம் இவைகள் மூலமாக இன்றைக்கு கர்த்தருடைய ஜனங்கள் விழுந்து கிடக்கிறார்கள்.

தேவன் நம்மை எச்சரிக்கிறார். விசுவாசிகள் ஊழியர்களிடம் ஜெபிக்கச் சொல்லும்போது, இந்த ஊழியர் தீர்க்கதரிசனமாக நமக்கு என்ன சொல்லுவார் என்று தேவனைத் தேடாமல் மனிதனைத் தேடும் பொழுது, அந்த மனிதனுக் குள்ளிருந்து தவறான ஆலோசனை கொடுக்கும்படி சாத்தான் செயல்படுகிறான். பிறகு சொல்லப்பட்ட வார்த்தை நிறைவேற வில்லையென்றால் கர்த்தரைக் குறை சொல்லுகிறார்கள்.

வேதம் சொல்லுகிறது: **''பொய் சொல்ல தேவன் மனிதனல்ல''.** ஆகையால், நீங்கள் வேத வாசிப்பிலும், தனி ஜெபத்திலும் பிரியமுள்ளவர்களாயிருந்தால், உங்களைச் சாத்தான் வஞ்சிக்க முடியாது. நீங்கள் ஞாயிறு ஆராதனைக்கும், ஜெபக் கூட்டங்களுக்கும் செல்லுவதற்கு முன்பாக உங்கள் பிரச்சனைகளைத் தேவனிடத்தில் சொல்லிவிட்டுச் செல்லுங்கள். அங்கே தேவன் தம்முடைய ஊழியர்கள் மூலமாக உங்கள் பிரச்சனைனளைக் குறித்துப் பேசுவார். அதிலிருந்து தப்பித்துக் கொள்ள தம்முடைய வார்த்தையின் மூலமாகப் பேசுவார். சாத்தான் நமக்கு எதிராய் கொண்டு வரும் எல்லா ஆயுதங்களையும் தேவனே முறித்துப் போடுவார். ஆம், இரட்சிக்கப்பட்ட ஆத்துமா மீண்டும் சாத்தான் வசம் சிறைப்பட்டு போகாதபடி எச்சரிக்கையாயிருப்போம்.

**‘‘கர்த்தர் ஓரேபிலே அக்கினியின் நடுவிலிருந்து உங்களோடே பேசின நாளில், நீங்கள் ஒரு ரூபத்தையும் காண வில்லை. ஆகையால் நீங்கள் உங்களைக் கெடுத்துக்கொண்டு, ஆண் உருவும், பெண் உருவும், பூமியிலிருக்கிற யாதொரு மிருகத்தின் உருவும், ஆகாயத்தில் பறக்கிற செட்டையுள்ள யாதொரு பட்சியின் உருவும், பூமியிலுள்ள யாதொரு ஊரும் பிராணியின் உருவும், பூமியின்கீழ்த் தண்ணீரிலுள்ள யாதொரு மச்சத்தின் உருவுமாயிருக்கிற இவைகளில் யாதொரு உருவுக்கு ஒப்பான விக்கிரகத்தை உங்களுக்கு உண்டாக்காதபடிக்கும், உங்கள் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வானத்தின் கீழெங்கும் இருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஏற்படுத்தின வானத்தின் சர்வ சேனைகளாகிய சந்திர சூரிய நட்சத்திரங்களை நோக்கி, அவைகளைத் தொழுது சேவிக்க இணங்காதபடிக்கும் உங்கள் ஆத்துமாக்களைக் குறித்து மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்’’. ( உபா 4 : 15 – 19)**

கர்த்தர் மோசேயைக் கொண்டு இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த எச்சரிப்பு: ஆகையால், தேவனுடைய சிருஷ்டிப்பைத் தொழுது தேவனுக்குக் கோபமூட்டாதபடி எச்சரிக்கையாயிருப்போம். நாம் அவைகளுக்குப் பயப்படத் தேவையில்லை.

**“கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார்”. (யாத் 14 :14)**

★ ★ ★

# 5. யுத்தத்தில் பயப்படாதிருங்கள்

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திலிருந்து விடுதலையாகி பயணத்தைத் தொடராதபடி செங்கடல் தடை செய்ததால் திகைத்த ஜனங்கள், பயந்து திரும்பிப் பார்த்தார்கள். பயந்து தாங்கள் விட்டு வந்த அந்த அடிமை வாழ்க்கையே பரவாயில்லை என்று மோசேயையும், ஆரோனையும் நோக்கி முறுமுறுத்தார்கள்.

**''நாங்கள் எகிப்திலே இருக்கும்போது, நாங்கள் எகிப்தியருக்கு வேலை செய்ய எங்களைச் சும்மா விட்டுவிடும் என்று சொன்னோம் அல்லவா? நாங்கள் வனாந்தரத்திலே சாகிறதைப்பார்க்கிலும் எகிப்தியருக்கு வேலைசெய்கிறது எங்களுக்கு நலமாயிருக்குமே என்றார்கள்''. (யாத் 14 : 12)**

இரட்சிக்கப்பட்டபின் ஒவ்வொரு விசுவாசியும் உதவிக்காக தேவனை நோக்கி கூப்பிட:டு பழகவேண்டும். அப்பொழுதுதான் உலகத்தில் ஆளுகை செய்கிற சாத்தானைவிட நம்முடைய தேவன் பெரியவர் என்பதை அறியமுடியும். ஆனால் இஸ்ரவேல் ஜனங்களுக்குத் தேவனைத் தெரியாது, மோசேயும் ஆரோனும் மட்டுமே தெரிந்திருந்தது. தேவன் அவர்கள் மூலமாக செய்த அற்புதங்களையும், அடையாளங்களையும் நம்பி அதை மட்டுமே சார்ந்து விடுதலைப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் தம்முடைய வல்லமையைக் குறித்தும், தம்மைக் குறித்தும் அறியவேண்டும் என்று தேவன் விரும்பின படியால் எகிப்தியரைத் தொடர்ந்து வரும்படி நடத்தினார்.

**"பார்வோன் சமீபத்து வருகிறபோது, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் கண்களை ஏறெடுத்துப்பார்த்து, எகிப்தியர் தங்களுக்குப் பின்னே வருகிறதைக்கண்டு, மிகவும் பயந்தார்கள். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்''. (யாத் 14 : 10)**

இதைத்தான் ஆண்டவர் எதிர்பார்த்தார். நாம் ஒவ்வொரு வரும் கர்த்தரை நோக்கி கூப்பிட வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. விசுவாசிகள் கர்த்தரை நோக்கி கூப்பிடும்போது கர்த்தர் தம்முடைய ஊழியர் மூலமாக பேசுவார். **"அப்பொழுது மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள். கர்த்தர் உங்களுக்காக யுத்தம்பண்ணுவார்; நீங்கள் சும்மாயிருப்பீர்கள் என்றான்"(யாத்.14:13,14).** மோசேயின் மூலமாகக் கர்த்தர் பேசியது மட்டுமல்ல, செயல்படுங்கள் என்றார். **"அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ என்னிடத்தில் முறையிடுகிறது என்ன? புறப்பட்டுப் போங்கள் என்று இஸ்ரவேல் புத்திரருக்குச் சொல்லு. நீ உன் கோலை ஓங்கி, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டி, சமுத்திரத்தைப் பிளந்துவிடு, அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்து போவார்கள்" ( யாத். 14 : 15,16) என்றார்.**

| | |
|---|---|
| **கோல்** | **: தேவ வல்லமை** |
| **ஓங்கி** | **: அதிகாரத்தைச் செயல்படுத்துதல்** |
| **நீட்டி** | **: கட்டளை கொடுத்தல்** |
| **பிளந்து விடுதல்** | **: விசுவாசித்து செயல்படுத்தவேண்டும்** |

எகிப்திய படைகள் இஸ்ரவேலரை நெருங்கும் சமயத்தில் இந்த அற்புதத்தைக் கர்த்தர் செய்தார். இஸ்ரவேலர் நடுச்சமுத் திரத்தில் வெட்டாந்தரையில் நடந்து போகிறதுபோல அணி அணியாய் நடந்து சென்றார்கள். இருபுறம் தண்ணீர் மதில் போல பிரிந்து நின்றது. ஜனங்கள் பயமின்றி நடந்து சென்றார்கள். தேவன் அந்த விசுவாசத்தை ஜனங்களுக்கு கொடுத்தார்.

விசுவாசம் என்பது தானாய் வந்து விடாது. எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாய் ஜெபிக்கிறோமோ, தேவன் செய்த

அற்புதங்களைக் குறித்து படித்து அல்லது கேட்டு அறிந்து கொண்டிருக்கிறோமோ, அந்த அளவுக்குதான் நமக்குள் விசுவாசம் உண்டாகும்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஒரு புறம் எகிப்திய இராணுவம், மற்றொரு புறம் சமுத்திரம், இரண்டு பக்கமும் மரணம் அவர்களை நெருக்கியது. இப்பொழுது உதவி செய்ய கர்த்தரைத் தவிர வேறு ஒருவரும் இல்லையென்ற நிலைமை. இந்த நிலைமையில்தான் கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள். கர்த்தர் உதவி செய்வார் என்ற விசுவாசம் அவர்களுக்குள் உருவாகியது. அவர்களுடைய தரிசனம் எப்படியாவது செங்கடலைக் கடந்துவிட வேண்டும் என்பதே. தேவன் அவர்களுடைய விசுவாசத்தைக் கனம் பண்ணினார். இந்த அற்புதம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு மட்டுமே. அதாவது, இரட்சிக்கப்பட்ட கர்த்தருடைய பிள்ளைகள் மற்றும் மனம் திரும்பி இயேசுவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே.

ஆனால், எகிப்திய இராணுவமும் சமுத்திரத்திற்குள் துணிந்து இறங்கியது. இஸ்ரவேல் ஜனங்களை எப்படியும் மீண்டும் எகிப்துக்கு கொண்டுபோய்விட வேண்டும் என்று பார்வோனும் அவன் சேனைகளும் முழுமூச்சாய் சமுத்திரத்திற்குள் பிரவேசித்தார்கள். **“இஸ்ரவேல் புத்திரர் சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையிலே நடந்துபோனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடதுபுறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. அப்பொழுது எகிப்தியர் அவர்களைத் தொடர்ந்து, பார்வோனுடைய சகல குதிரைகளோடும், இரதங்களோடும், குதிரை வீரரோடும் அவர்கள் பிறகாலே சமுத்திரத்தின் நடுவே பிரவேசித்தார்கள்”. (யாத் 14 : 22,23).**

இஸ்ரவேல் ஜனங்கள் பயந்து பிரயாணத்தைத் தொடர்ந்தார்கள். எந்த நிமிஷமும் தண்ணீர் தங்களை மூடிவிடும் என்ற ஆபத்து, பின்னால் துரத்தி வருகிற எகிப்திய இராணுவமும் எந்த நிமிஷமும் பிடிக்க வாய்ப்பு உண்டு என்ற நிலையில்தான் நடந்தார்கள். ஆனால், கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்னே நடந்தார்.

**"அப்பொழுது இஸ்ரவேலரின் சேனைக்கு முன்னாக நடந்த தேவதூதனானவர் விலகி, அவர்களுக்குப் பின்னாக நடந்தார். அவர்களுக்கு முன் இருந்த மேகஸ்தம்பமும் விலகி, அவர்கள் பின்னே நின்றது. அது எகிப்தியரின் சேனையும் இஸ்ரவேலரின் சேனையும் இராமுழுதும் ஒன்றோடொன்று சேராதபடி அவைகள் நடுவில் வந்தது; எகிப்தியருக்கு அது மேகமும் அந்தகாரமுமாய் இருந்தது, இஸ்ரவேலருக்கோ அது இரவை வெளிச்சமாக்கிற்று". (யாத் 14 : 19,20)**

இன்றைக்கும் இரட்சிக்கப்பட்ட பிறகு விசுவாசத்தின் மூலமாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் எப்படியாவது சமுத்திரத்தைக் கடந்து கானான் தேசத்தை அடைந்துவிட வேண்டும் என்ற விசுவாசத்துடன் நடந்தது போலத்தான், நாமும் இந்த உலகத்தில் வாழ்ந்து முடித்து பரம கானான் தேசமாகிய மோட்சத்தில் சேர வேண்டும் என்ற விசுவாசமும், தரிசனமும் நமக்குள் உருவாக வேண்டும். அப்பொழுதுதான் அன்றைக்கு இஸ்ரவேலருக்குப் பாதுகாப்பாய் வந்த அக்கினி ஸ்தம்பமும் மேகஸ்தம்பமும் நம்முடன் பாதுகாப்பாய் வரும். அந்த அக்கினிஸ்தம்பமும், மேக ஸ்தம்பமும் பரிசுத்த ஆவியானவர்தான். எப்பொழுதும் அவர் நம்மோடே கூட வருவார்.

துணிந்து வந்த எகிப்திய இராணுவத்தின் கூட்டத்தைக் கர்த்தர் கலங்கடிக்க ஆரம்பித்தார். இன்றைக்கு கர்த்தருடைய பிள்ளைகளின் நியாயமான காரியங்களுக்கு விரோதமாக சத்துருவாகிய பிசாசு எத்தனை மனிதர்களையும், கூட்டத்தையும், ஏவி எழுப்பினாலும் கர்த்தர் அவர்களைக் கலங்கடிப்பார். பயமும் திகிலும் பிடிக்கப்பண்ணுவார்.

**“உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்”. ( ஏசா 54 : 17)** என்று வேதம் சொல்லுகிறது. **“கிழக்கு வெளுத்துவரும் ஜாமத்தில் கர்த்தர் அக்கினியும் மேகமுமான ஸ்தம்பத்திலிருந்து எகிப்தியரின் சேனையைப்பார்த்து, அவர்கள் சேனையைக் கலங்கடித்து, அவர்களுடைய இரதங்களிலிருந்து உருளைகள் கழலவும், அவர்கள் தங்கள் இரதங்களை வருத்தத்தோடே நடத்தவும் பண்ணினார். அப்பொழுது எகிப்தியர்: இஸ்ரவேலரைவிட்டு ஓடிப்போவோம், கர்த்தர் அவர்களுக்குத் துணை நின்று எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார் என்றார்கள்”. (யாத்.14:24,25)** நம்முடைய தேவன் நமக்கு விரோதமாய் சத்துருக்கள் எழும்பும்போது, அவர்களைக் கலங்கடிப்பது மட்டுமல்ல, பின்னிட்டுத் திரும்பி ஓடும்படி செய்வார்.

**‘‘உன் கண்கள் கண்ட பெரிய சோதனைகளையும், அடையாளங்களையும், அற்புதங்களையும், உன் தேவனாகிய கர்த்தர் உன்னைப் புறப்படப்பண்ணிக் காண்பித்த பலத்த கையையும் ஓங்கிய புயத்தையும் நன்றாய் நினைத்து, அவர்களுக்குப் பயப்படாதிரு; நீ பார்த்துப் பயப்படுகிற எல்லா ஜனங்களுக்கும் உன் தேவனாகிய கர்த்தர் அப்படியே செய்வார். மீதியாயிருந்து உனக்குத் தப்பி ஒளித்துக் கொள்ளுகிறவர்களும் அழிந்து போகுமட்டும் உன் தேவனாகிய கர்த்தர் அவர்களுக்குள்ளே குளவிகளை அனுப்புவார். அவர்களைப் பார்த்துப் பயப்பட வேண்டாம். உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குள்ளே இருக்கிறார், அவர் வல்லமையும் பயங்கரமுமான தேவன்’’ (உபா. 7 : 19-21).** ஆம், கர்த்தர் எகிப்தியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார். எகிப்தியரும் அவர்களின் இராணுவமும் தப்பிக்க வழியில்லாமல் திணறினார்கள்.

**“கர்த்தர் மோசேயை நோக்கி; ஜலம் எகிப்தியர்மேலும் அவர்களுடைய இரதங்கள்மேலும் அவர்களுடைய குதிரை வீரர் மேலும் திரும்பும்படிக்கு, உன் கையைச் சமுத்திரத்தின் மேல் நீட்டு என்றார்.**

"அப்படியே மோசே தன் கையைச் சமுத்திரத்தின்மேல் நீட்டினான்; விடியற்காலத்தில் சமுத்திரம் பலமாய்த் திரும்பி வந்தது; எகிப்தியர் அதற்கு எதிராக ஓடும்போது, கர்த்தர் அவர்களைக் கடலின் நடுவே கவிழத்துப்போட்டார். ஜலம் திரும்பி வந்து, இரதங்களையும் குதிரைவீரரையும், அவர்கள் பின்னாக சமுத்திரத்தில் பிரவேசித்திருந்த பார்வோனுடைய இராணுவம் அனைத்தையும் மூடிக்கொண்டது; அவர்களில் ஒருவனாகிலும் தப்பவில்லை. இஸ்ரவேல் புத்திரரோ சமுத்திரத்தின் நடுவாக வெட்டாந்தரையின் வழியாய் நடந்து போனார்கள்; அவர்கள் வலதுபுறத்திலும் அவர்கள் இடது புறத்திலும் ஜலம் அவர்களுக்கு மதிலாக நின்றது. இவ்விதமாய்க் கர்த்தர் அந்நாளிலே இஸ்ரவேலரை எகிப்தியரின் கைக்குத் தப்புவித்து இரட்சித்தார். கடற்கரையிலே எகிப்தியர் செத்துக்கிடக்கிறதை இஸ்ரவேலர் கண்டார்கள்". (யாத் 14:26-30)

"...ஜெயமோ கர்த்தரால் வரும்". (நீதி. 21:31)

★ ★ ★

# 6. பிசாசை எதிர்கொள்ளும் யுத்தம் - வாழ்வில்

இந்தக் கடைசி காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நமக்கு சாத்தானை ஜெயிப்பதற்குத் தேவன் தம்முடைய குமாரன் மூலம் கொடுத்த ஆயுதங்கள்:

| | | |
|---|---|---|
| **இயேசுவின் இரத்தம்** | **:** | **குற்ற உணர்வை நீக்குகிறது** |
| **தேவனுடைய வார்த்தை** | **:** | **சாத்தானின் வார்த்தைகளை ஜெயிக்கிறது** |
| **சாட்சியின் வாழ்க்கை** | **:** | **உலகத்தை ஜெயிக்கிறது** |

**"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன்; இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்". ( எபி 1 : 1,2)**

சாத்தானாகிய வலுசர்ப்பத்தைப் பார்த்து தேவன் சொல்லும் போது: **"உனக்கும் ஸ்திரீக்கும் ; உன் வித்துக்கும் அவன் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார்; நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார்". ( ஆதி 3 : 15)**

கிறிஸ்துவின் சந்ததிக்கும் சாத்தானின் சந்ததிக்கும் எப்பொழுதும் போராட்டம் நடந்து கொண்டே இருக்கும் என்று சொல்லிவிட்டார். இயேசுவும் தம்முடைய சீஷரிடம் சொல்லும் போது, **"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு; ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்". (யோ 16 : 33).**

இயேசு நூறு சதவீதம் மனிதனாகவும், நூறு சதவீதம் தேவனாயும் இருந்த படியால், இயேசுவில் உள்ள மனித சரீரத்தின் மேல் தன்னுடைய ஆளுகையைக் கொண்டுவர சாத்தான் போராடினான். **"இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல்**

**வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமா யிருக்கிறேன் என்று உரைத்தது". ( மத் 3 : 16,17)**

தேவன் இயேசுவைக் குறித்து இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் நான் பிரியமாயிருக்கிறேன் என்று சாட்சி கொடுத்தபடியால், இயேசுவின் சரீரபிரகாரமான காரியங்கள் மேல் சாத்தான் சோதிக்க விரும்பினான். ஆவியானவர் சாத்தானின் சோதனைக்கு இயேசுவை ஒப்புக்கொடுத்தார். **''அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். அவர் இரவும் பகலும் நாற்பதுநாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது சோதனைக்காரன் அவரிடத்தில் வந்து: நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக் கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான்" ( மத் 4 : 1-3).**

சரீரப் பசிக்கு முதல் தேவை அப்பம் என்பதினால் முதல் சோதனையை அப்பத்திலிருந்து பிசாசு ஆரம்பிக்கிறான். ஏனென்றால் ஆவியான தேவன் மாம்ச சரீரமுள்ள தம்முடைய குமாரனை இவர் என்னுடைய நேசகுமாரன் என்று சாட்சி சொன்னபடியால், நீர் தேவனுடைய குமாரன், ஆகையால் சரீரபிரகாரமான தேவைகளை அற்புதம் செய்து, நீர் பூர்த்தி செய்து கொள்ளும் என்ற கருத்தில் சாத்தான் பேசினான்.

வேதம் நமக்குச் சொல்லுகிறது: **"நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவி கொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்". ( 1யோவான் 5 : 14)**

இயேசு இந்த உலகத்தில் வாழ்ந்து சிலுவையிலே மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழும்வரைக்கும் நமக்கு கொடுத்திருக்கிற வாக்குத்தத்தங்கள்தான் அவருக்கும் பிதாவினால் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இயேசுவைக் காத்திருந்து பிதாவினிடம் கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கு மாறாக

சுயமாய் செயல்படும்படி சாத்தான் தூண்டிவிடுகிறான். இன்றைக்கும் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொண்ட தேவ பிள்ளைகளை, தேவனுக்குக் காத்திராதபடி அவசரப்பட்டு காரியங்களைச் செய்யும்படி பிசாசு தூண்டி விடுகிறான். சிக்கிக் கொண்டபிறகு வேதனைகளை அனுபவிக்கிறார்கள். சாத்தான் சிரிக்கிறான். பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்ட பின்பு அவரே நன்மையானாலும், தீமையானாலும் அவைகளின் ஊடாய் நம்மை நடத்துகிறார்.

நாம் வழிமாறிச் செல்லும்போது வேத வசனத்தின் மூலம் நம்மோடு பேசுகிறார். நாம் கீழ்ப்படியவில்லையென்றால் அவர் நம்மோடுபோராடமாட்டார், விட்டுவிடுவார். **"...கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும்" (கொலோ. 3:6) என்று வேதம் சொல்லுகிறது.**

இயேசு பிசாசுக்கு பதில் சொல்லும் போது, **"அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தை யினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார்" ( மத் 4 : 4).** மீண்டும் பிசாசு சோதனையைத் தொடருகிறான். **"நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்" ( மத் 4 : 6).**

நாம் தேவ ஆவியைப் பெற்றிருந்தாலும், மனிதர்கள்தான் என்பதை எப்பொழுதும் நினைவில் கொள்ளவேண்டும். தேவன் சொல்லாத எந்தக் காரியத்திலும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தேவாலயத்தின் உச்சியில் இருந்து கீழே குதித்தால் என்னவாகும், நாம் நொறுங்கிப் போவோம். பிசாசு இயேசுவிடம் சொல்லும்போது: நீர் தேவகுமாரன், ஆகையால் உம்முடைய தகப்பன் நீர் குதிக்கும் போது, தேவ தூதர்களுக்குக் கட்டளை கொடுத்து விடுவார். உமக்கு

ஒரு ஆபத்தும் வராது. ஆகையால் தைரியமாய்க் குதியும் என்று ஏமாற்றுகிறான். பிசாசு ஏமாற்றுக்காரன் நம்முடைய ஆதி தகப்பனையும், தாயையும் ஏமாற்றினவன். இன்றைக்கும் கர்த்தருடைய பிள்ளைகளை ஏமாற்றிக் கொண்டுதான் இருக்கிறான். **"அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார்" (மத். 4 : 7)** தேவனிடம் எதையும் எதிர்த்துப் பேச முடியாது. அவர் சொன்னது சொன்னதுதான்.

வேதம் சொல்லுகிறது: **''தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்து திருத்துகிறவரல்லவே"( யோபு 33 : 14). "மறுபடியும், பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டு போய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து, நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்". ( மத் .4 : 8- 10)**

ஆதாமையும், ஏவாளையும் ஏமாற்றி தன்னுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய பண்ணிய பிசாசு, இயேசுவையும் ஏமாற்றி தன்னுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியப்பண்ணி இயேசுவின் மேல் தன்னுடைய அதிகாரத்தைச் செலுத்த முயற்சித்தான். ஆனால், இயேசுவிடம் அவன் வித்தை பலிக்கவில்லை. தோற்கடிக்கப்பட்டான், இன்றைக்கும் தேவனால் அழைக்கப்பட்டுத் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் கூட உலகத்தின் சிற்றின்பங்களைக் காட்டி தேவனை மறக்கச்செய்து அவர்கள் மேல் தன்னுடைய அதிகாரத்தைப் பிசாசு செலுத்தி வருகிறான். பிசாசு தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப் படியாதவர்களைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து தனக்குள் சிறைப்படுத்தி விடுவான். மீண்டும் அவனிடம் இருந்து விடுதலையாவது மிக கஷ்டம்.**"ஆகையால் தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்". ( யாக் 4 : 7)**

# 7. பிசாசுக்கு எதிரான யுத்தம் - சபையில்

சபை என்பது ஒருமனப்பட்ட ஒரு கூட்டம். எங்கே இரண்டு பேர், மூன்று பேர் கூடியிருக்கிறார்களோ அவர்கள் நடுவில் நான் இருக்கிறேன் என்று இயேசு சொன்னார். சபையானது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த ஒருமனமுள்ள கூட்டம். இந்தச் சபைக்கு பரிசுத்த ஆவியானவரே தலைவர். ஆவியானவர்தான் சபைகளுக்கு ஊழியர்களை நியமிக்கிறார். இந்த ஊழியர்களை சபையின் தூதன் என்று ஆவியானவர் நமக்கு அறிமுகப் படுத்துகிறார்.

இவர்கள் கண்காணிப்புக்கு கொடுக்கப்பட்ட ஆத்துமாக் களைக் குறித்து தேவனுக்கு கணக்கு கொடுக்க வேண்டும். ஒரு சபையின் தலைவரோ அல்லது ஒரு ஜெபக்குழுவின் தலைவரோ, அவர்களுக்கென்று கொடுக்கப்பட்ட ஆத்துமாக்க ளாகிய இரண்டு பேரானாலும், மூன்று பேரானாலும் அல்லது ஐம்பது, நூறு, ஆயிரமானாலும் சரி, சபைத்தலைவர் மூலமாகத் தான் ஆவியானவர் பேசுகிறார். சபையின் தலைவர் மூலமாகக் கொடுக்கப்படுகிற தேவதூது, சபை மக்களுக்கு மட்டுமல்ல போதகம் பண்ணுகிற சபையின் தலைவருக்கும் சேர்த்துதான் அவர் வாயிலிருந்து ஆவியானவர் பேசுகிறார்.

**“நான் ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்த அந்த நாள்களில் சபைகளில் தேவ செய்தியளிக்க வேண்டும் என்று மிகவும் ஆசையாகயிருக்கும். அதற்காக என்னுடைய தனி ஜெபங்களில் தொடர்ந்து ஜெபம் பண்ணிக்கொண்டேயிருந்தேன். முதல், முதல் ஒரு ஜெபக்கூட்டத்துக்கு செய்தி கொடுக்க எனக்கு அழைப்பு வந்தது. மறுநாள் செய்திக்குச் செல்லவேண்டும். அதற்காக ஜெபித்துக் கொண்டிருக்கும் போது ஆண்டவர் ஒருதரிசனம் கொடுத்தார்.**

**நான் ஒரு இடத்தில் நின்றுகொண்டு பார்த்துக் கொண்டிருந்தேன். அது ஒரு மெயின் ரோடு, அந்த இடத்தில் பஸ்ஸ்டாப் ஒன்று இருந்தது, அந்த பஸ் ஸ்டாப்பில் ஒரு மனிதர் உட்கார்ந்திருந்தார். சிறிது நேரத்தில் இன்னொரு மனிதர் ரோடு வழியாக நடந்து வந்து கொண்டிருந்தார். வந்தவரின் கையில் நிறைய கற்கள் இருந்தது. பஸ் ஸ்டாப் அருகில் வந்த உடன் கையில் இருந்த கற்களை ஒவ்வொன்றாக எடுத்து, உட்கார்ந்திருந்த அந்த மனிதர் மீது எவ்வளவு வேகமாக வீசி எறிய முடியுமோ அவ்வளவு வேகத்தில் எறிந்து கொண்டிருந்தார். நான் பார்த்துக் கொண்டே நின்றிருந்தேன். உட்கார்ந்திருந்தவர் முகமெல்லாம் இரத்தக் காயம். கற்களை எறிந்து முடித்த உடன் அவர் வந்த வழியே திரும்பி சென்று கொண்டிருந்தார். நான் கூர்ந்து பார்த்தபோது, பார்த்துக் கொண்டிருந்ததும் நான் தான், உட்கார்ந்திருந்ததும் நான்தான். உட்கார்ந்திருந்த மனிதர் மேல் கல்லெறிந்ததும் நான்தான், அதைக்குறித்து ஆவியானவர் எனக்கு விளக்கினார்:**

| | | |
|---|---|---|
| **உட்கார்ந்திருந்தது** | **:** | **உனக்கு கொடுக்கப்பட்ட ஊழியம்** |
| **கற்கள்** | **:** | **தேவனுடைய வார்த்தை** |
| **வீசி எறிவது** | **:** | **உன்னைக் கொண்டு ஆவியானவர் பேசுவது** |
| **காயப்படுவது** | **:** | **தேவனுடைய வார்த்தையின் மூலம் சிட்சிப்பது** |
| **பார்த்துக் கொண்டிருப்பது** | **:** | **உன்னுடைய மனசாட்சி** |

அதையும் நான் சுத்திகரிப்பேன் என்றார். நான் மகிழ்ச்சியுடன் ஆவியானவர் சொன்னதை ஏற்றுக்கொண்டு, அவர் கொடுத்த ஊழியத்தைச் செய்ய சம்மதித்தேன்.

எனக்கன்பானவர்களே, பரிசுத்த ஆவியானவர் நம் மேல் வைத்த அன்பின் மூலமாகவே நம்மை சிட்சிக்கிறார். நம்மை எப்படியாவது சபை எடுத்துக் கொள்ளப்படும்போது, அவருடன் அழைத்துச்செல்ல வேண்டும் என்று விரும்புகிறார். சபை கர்த்தருடைய வார்த்தையின் மூலமாக சுத்திகரிக்கப்படவேண்டும். தேவனுடைய ஊழியர் கர்த்தரின் வார்த்தையை உபயோகிக்கும் போது, பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவியின் மூலமாக சுத்திகரிப்பார்.

சபைத் தலைவர் தைரியமாக பாவத்தைக் குறித்தும், கிறிஸ்துவின் நீதியைக்குறித்தும், வரப்போகிற தேவனின் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்துப் பேசவேண்டும்.

சபையை நடத்துகிற ஊழியர் ஒவ்வொரு நிமிஷமும் தன்னுடைய மனசாட்சியைச் சுத்திகரிப்பதற்கு கிறிஸ்துவிடம் தன்னை ஒப்புக் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட ஊழியர் மட்டும் தான் சபையில் தைரியமாக பேசமுடியும். இல்லையென்றால், சபை ஊழியரை பிசாசு தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, முழுச் சபையையுமே கெடுத்து விடுவான். அதே நேரத்தில் விழுந்துபோன ஆத்துமாக்களை மறுபடியும் புதுப்பிக்க இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் மூலம் கிடைக்கும் கிருபையையும் சுட்டிக் காட்ட வேண்டும். பரிசுத்த ஆவியானவர் முதல் முதல் சீஷர்கள் ஒருமனப்பட்டு கூடியிருந்த இடத்தில் இறங்கி, முதல் சபையை ஸ்தாபித்தார். ஆவியானவர் சர்வ வியாபகர். எங்கும் நிறைந்திருக்கிறார். பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. உலகமெங்கிலுமுள்ள எல்லாச் சபைகளுக்கும் அவரே தலைவர்.

**“பெந்தெகோஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்தில் வந்திருந்தார்கள். அப்பொழுது பலத்த காற்று அடிக்கிறமுழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர்மேலும் வந்து அமர்ந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்” (அப்.2:1-3).**

பரிசுத்த ஆவியானவரால் ஸ்தாபிக்கப்பட்ட முதல் சபைக்கு இந்த அடையாளங்கள் கொடுக்கப்பட்டது. இந்த வரங்களும் அவர்களுக்குள் கிரியை செய்தது. இன்றைக்கும் சர்வவியாபகராயிருக்கிற பரிசுத்த ஆவியானவர், இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள்மேலும், ஏற்றுக் கொள்ளாதவர்கள்மேலும், வியாபித்திருக்கிறார். ஆனால். இயேசுவை ஏற்றுக் கொண்டவர்களின் இருதயத்திற்குள் இறங்கி,

உள்ளே வசிப்பதற்கு அவர்களின் சரீரத்தைத் தமக்கு ஆலயமாக தேர்ந்தெடுத்துக் கொள்ளுகிறார். **"ஆகையால், நீங்கள் இனி அந்நியரும், பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசு கிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார். அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டுப்பட்டு வருகிறீர்கள்" (எபே.2:19-22).** இந்தச் சரீரமாகிய ஆலயம் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். ஆவியானவர் உள்ளே நிரந்தரமாய் தங்கியிருக்க எப்பொழுதும் பரிசுத்தமாய் இருக்கவேண்டும்.

பரிசுத்தத்துக்கு விரோதமான அசுத்தங்கள் சரீரத்தில் காணப்பட்டால் ஆவியானவர் வசனத்தின் மூலம் கண்டித்து, கிரியைகள் மூலம் சிட்சிப்பார். அசுத்தங்கள் யாவும் சாத்தானுடைய அழுக்கும் கந்தையுமான பழைய சரக்குகள். இந்தக் குப்பைகளை ஒவ்வொரு நாளும் நாம் தற்பரிசோதனை செய்து, ஆவியானவரின் துணையோடு வெளியே கொட்ட வேண்டும். இது நாம் செய்யவேண்டிய வேலை. நாம் இதை செய்யவில்லையென்றால், நம்முடைய சரீரத்தில் இருக்கும் சாத்தானுடைய அசுத்தங்கள் மேல் ஆவியானவர் தமது யுத்தத்தைத் தொடங்குவார். ஆவியானவர் எபேசு சபையின் தூதனுக்குச் சொல்லும்போது: **"ஆனாலும், நீ ஆதியில் கொண்டிருந்த அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை உண்டு" (வெளி 2 : 4).**

ஒரு மனிதன் இரட்சிக்கப்பட்டபொழுதும், அவன் ஊழியத்தைப் பெற்றுக்கொண்ட போதும் இயேசுவை எவ்வளவு வைராக்கியமாக நேசித்து ஊழியம் செய்தானோ,அதே அன்பின்

வைராக்கியம் மரண பரியந்தம் இருக்க வேண்டும். அப்படி யில்லையென்றால் சாத்தானுக்குக் கொஞ்சம் கொஞ்சமாக உங்கள் வாழ்க்கையில் இடம் கொடுக்கிறீர்கள்.

**“ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தா யென்பதை நினைத்து, மனந்திரும்பி, ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக. இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, நீ மனந்திரும்பாதபட்சத்தில், உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கிவிடுவேன்” (வெளி 2 :5)** என்று எச்சரிக்கிறார். யோவானைக் குறித்து: **“அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்” (யோவான் 5 : 35).**

விளக்கு என்பது ஊழியத்தைக் குறிக்கும். அதனின்று தண்டை நீக்கி விட்டால் விளக்கு பல பகுதிகளாக பிரிந்து போகும். பிரிந்து போன விளக்குஎரியாது. உனக்கு கொடுக்கப்பட்ட ஊழியம் மங்கிப் போகும்.

ஆவியானவர் பெர்கமு சபையின் தூதனுக்குச் சொல்லும் போது; நான் இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை வைத்து யுத்தம் பண்ணுகிறவர் என்று சொல்லுகிறார். இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்பது தேவனுடைய வார்த்தை: **“ஆகிலும், சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனை செய்த, பிலேயாமுடைய போதகத்தைக் கைக் கொள்ளுகிறவர்கள் உன்னிடத்தில் உண்டு” ( வெளி 2 : 14).**

**“நீ மனந்திரும்பு; இல்லாவிட்டால் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து, என் வாயின் பட்டயத்தால் அவர்களோடே யுத்தம் பண்ணுவேன்” ( வெளி 2 : 16).**

இஸ்ரவேல் ஜனங்களை எதிர்த்து நீர் வெற்றி பெற வேண்டும் என்றால், விபசார பாவம் செய்வதற்கு நீர் அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும். அவர்கள் பாவம் செய்து விட்டால் நீர் அவர்களை அழிக்கத் தேவையில்லை. தேவனே அவர்களை அழித்து விடுவார் என்று பாலாக் ராஜாவுக்கு பணத்தை வாங்கிக்கொண்டு பிலேயாம் என்ற தீர்க்கதரிசி ஆலோசனை சொன்னான்.

எனக்கன்பானவர்களே, ஒருவர் நம்முடைய ஊழியங்களுக்கு அதிகமாக உதவி செய்கிறார் என்பதற்காக அவர்கள் செய்யும் பாவங்களை கண்டிக்காமல் இருக்கக்கூடாது. அப்படி நாம் காணாதவர்கள் போல் இருந்தால் அவர் செய்யும் பாவங்களுக்கு நாம் துணை போகிறோம். என் வாயின் பட்டயத்தால் யுத்தம் பண்ணுவேன் என்று ஆவியானவர் எச்சரிக்கிறார். தீயத்தீரா சபையின் தூதனுக்கு ஆவியானவர் சொல்லும்போது; நான் அக்கினி ஜ்வாலை போன்ற கண்களுடையவர் என்று சொல்கிறார். அதன் மூலம் இருளான உன் இருதயத்திற்குள் மறைந்திருக்கிறவர்களையும் என்னால் வெளியே கொண்டு வரமுடியும் என்று எச்சரிக்கிறார்.

**''ஆகிலும், உன்பேரில் எனக்குக் குறை உண்டு; என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும் படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய். அவள் மனந்திரும்பும்படியாய் அவளுக்குத் தவணை கொடுத்தேன்; தன் வேசிமார்க்கத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பமில்லை" (வெளி. 2:20, 21).**

அவள் சொல்லுகிற தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் மார்க்கமல்ல. அது வேசி மார்க்கம். சாத்தானின் ஆவியினால்

பாதாளத்துக்குப் போகும் வழியைக் காட்டுகிறாள். ஆனால் நீ, கண்டும் காணாதவன் போல் அவளுக்கு இடங்கொடுக்கிறாய் என்று எச்சரிக்கிறார். உனக்குள் கொள்ளைநோயை அனுப்புவேன் என்கிறார். சர்தை சபையின் தூதனுக்கு ஆவியானவர் சொல்லும் போது; **"...உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். நீ உயிருள்ளவனென்று பெயர் கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய். நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக காணவில்லை. ஆகையால், நீ கேட்டுப் பெற்றுக் கொண்ட வகையை நினைவுகூர்ந்து, அதைக்கைக்கொண்டு மனந்திரும்பு; நீ விழித்திரா விட்டால், திருடனைப்போல் உன் மேல் வருவேன்; நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" (வெளி. 3:1-3).**

சபைகள் தேவஆவியால் செயல்பட்டுக் கொண்டிருந் தாலும் சபைக்குள்ளே மனுஷஆவி சாத்தானுக்கு இடம் கொடுக்கிற படியால் சாத்தானின் ஆவியும் உள்ளே கிரியை செய்கிறது என்பது தெளிவாகிறது. சபைக்குள் பிசாசின் ஆவிகள் கிரியை செய்கிறபடியால் ஆவியானவரின் யுத்தமும் அங்கே தொடரும். இப்படியிருக்கிறபடியால் சபையை நடத்துகிற தலைவர் விசுவாசத்தினால் கிறிஸ்துவுக்குள் பாவத்துக்கு மரித்தவராகவும், எடுத்துக்கொள்ளப்பட இயேசு உயிரோடே எழுந்ததற்கு அடையாளமாக கிறிஸ்துவுடன் எழுந்தவராக எப்பொழுதும் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும்.

எப்பொழுதும் கிருபாசனத்துக்கு முன்பாக நின்று சபை தேவகிருபையினால் நிறைந்திருக்கும்படி ஜெபிக்கவேண்டும். ஆவியானவர் லவோதிக்கேயா சபை தூதனுக்குச் சொல்லும் போது: **"...நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிற படியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்" (வெளி.3:16)** என்கிறார். வாந்தி என்று சொல்லுவது, உன்னை ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்பதே,

**“நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவிய சம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்;” (வெளி 3 : 17).**

இந்த வார்த்தைகள் தன்னுடைய குறைகளைக் குறித்து அறிந்துகொள்ள தன் செவியைச் சாய்க்காமல் தனக்குத்தானே திருப்தியடைந்துவிட்டதை குறிக்கிறது. தேவன் நமக்கென்று வாக்கு பண்ணியிருக்கிற ஆவிக்குரிய ஐசுவரியத்தின்மேல் தாகம் கொள்ளாமல், மந்த நிலைமையைக் குறித்து சொல்லுகிறது.

பவுல் சொல்லுகிறார்; **‘‘இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயிலும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும் படிக்கும், அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்” (பிலிப் 3 :10, 11).** என்னுடைய ஞானம் அறிவு எல்லாம் ஒன்றுக்கும் உதவாது என்று தீர்மானித்து விட்டேன் என்கிறார்.

| | | |
|---|---|---|
| **நிர்ப்பாக்கியம்** | : | **ஆவிக்குரிய புத்திர சுவிகாரமின்மை** |
| **பரிதபிக்கப்பட்டவன்** | : | **இம்மைக்காக மாத்திரம் கிறிஸ்துவின் மேல் நம்பிக்கை** |
| **தரித்திரன்** | : | **இருதயத்தில் தேவனுடைய வார்த்தை இல்லாமை** |
| **குருடன்** | : | **பரலோக தரிசனமின்மை** |
| **நிர்வாணி** | : | **இரட்சிப்பின் வஸ்திரமில்லாமை** |

<u>இந்த லவோதிக்கேயா சபையைக் குறித்து:</u>

1. ஆத்தும ஆதாயம் செய்யாதவர்கள் என்கிறார். தேவன் எதிர் பார்ப்பது ஒவ்வொரு விசுவாசியும் பரலோகத்திற்கு ஆத்துமாக் களை கொண்டு சேர்க்கவேண்டும். நாம் மட்டும் பரலோகம்

போனால் போகாது. மற்றவர்களுக்கும் சுவிசேஷம் சொல்லி அவர்களை கிறிஸ்துவண்டை கொண்டு வரவேண்டும்.

2. இந்த உலக ஆசீர்வாதத்திற்கும் இம்மைக்குறிய புகழ்ச்சிக்கும் மட்டுமே இயேசுவை பின்பற்றி நடப்பவர்கள் என்று வேதனைப் படுகிறார். வேதம் தெளிவாய் சொல்லுகிறது. நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் இருக்கிறது.

3. இயேசு சொன்னார்: உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். இல்லாதவன் எவனோ அவனுக்கு உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும். ஒரு மனிதன் இருதயத்தில் வேத வசனம் எவ்வளவு நிறைந்திருக்கிறதோ அதன் அடிப்படையில் தான் இவ்வுலக ஆசீர்வாதமும், ஆவிக்குரிய ஆசீர்வாதமும் கிடைக்கும். பரலோகத்திலிருந்து என்னவேண்டுமானாலும், எதைக் கேட்கவேண்டுமானாலும் வேத வசனமே திறவுகோல்.

4. இயேசுவை பின்பற்றுகிறேன் என்று சொல்லியும் பரலோகத்துக்குரிய தரிசனமில்லாமல் இந்த பூமியில் வாழ்ந்து கொண்டிருப்போமானால் சபை எடுத்துக் கொள்ளப்படும் பொழுது நிச்சயம் கைவிடப்படுவோம்.

5. இரட்சிக்கப்படாத கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்துச் சொல்லும்போது, இராஜா வீட்டில் நடக்கும் கல்யாண விருந்தை மையமாக வைத்து ஒரு உவமையைச் சொல்லுகிறார். **“விருந்தாளிகளைப் பார்க்கும்படி ராஜா உள்ளே பிரவேசித்தபோது, கலியாண வஸ்திரம் தரித்திராத ஒரு மனுஷனை அங்கே கண்டு; சிநேகிதனே, நீ கலியாண வஸ்திரமில்லாதவனாய் இங்கே எப்படி வந்தாய் என்று கேட்டான்; அதற்கு அவன் பேசாமலிருந்தான். அப்பொழுது ராஜா பணிவிடைக்காரரை நோக்கி; இவனைக் கையுங்காலும் கட்டிக் கொண்டுபோய், அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கிற பறம்பான இருளிலே போடுங்கள் என்றான். அந்தப்படியே அழைக்கப்பட்டவர்கள் அநேகர், தெரிந்துகொள்ளப் பட்டவர்களோ சிலர் என்றார்” (மத் 22:11-14).**

ஆம், நீங்கள் அழைக்கப்பட்டவர்கள்தான். ஆனால், தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்களா? எனக்கன்பான சகோதரனே, சகோதரியே கர்த்தர் தெரிந்து கொண்ட பட்டியலில் உங்கள் பெயர் இருக்கவேண்டும் என்றால் ஆவியானவர் சொல்லும் ஆலோசனைப்படி நடவுங்கள். **“நான், நீ ஐசுவரியவனாகும் படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம் தோன்றாதபடிக்கு நீ உடுத்திக் கொள்வதற்கு வெண் வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்” (வெளி. 3 : 18).**

நீங்கள் தனியாய் ஜெபிக்கும் போதாவது, ஆராதனை வேளையில் ஜெபிக்கும் போதாவது ஆண்டவரே என்னை இரட்சியும் என்று சொல்லி உங்கள் பழைய பாவங்களை அறிக்கை செய்து விட்டு, புதிய நீதியின் வஸ்திரத்தை இயேசு கிறிஸ்துவிடம் கேட்டு பெற்றுக்கொள்ளுங்கள். இரட்சிப்பின் வஸ்திரமாகிய கிறிஸ்துவின் நீதி உங்களை மூடவில்லை யென்றால், தேவதூதர்களுக்கு முன்பாகவும் நீங்கள் நிர்வாணமாய் நிற்கிறீர்கள்; உங்கள் சுயநீதியாகிய நிர்வாணத் துடன் பரலோகம் செல்லமுடியாது. ஆவியானவர் சொல்லுகிறார்; **“கேளுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்” (லூக் 11:9).**

**“கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில் மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத் தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும் வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு.**

ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும், திராணியுள்ள வர்களாகும்படிக்கு தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாச மென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்" (எபே 6:10-17)

"ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும்". (வெளி.22:20)

★ ★ ★

## 8. யுத்தத்தில் வெற்றி சிறந்த கர்த்தர்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பெலவீனமுள்ளவராய் மரித்து, பெலமுள்ளவராய் மூன்றாம் நாள் எழுந்தார். சாத்தானும் அவனுடைய தூதர்களும் இயேசு மரித்து விட்டார், இனி அவர் மூலமாக தங்களுக்கு எந்த தொந்தரவு மில்லையென்று நினைத்திருக்கலாம். இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்த பின்பு, அடக்கம் பண்ணப்பட்ட கல்லறைக்கு சீஷர்களும் சில ஸ்திரீகளும் வந்து பார்க்க வந்தபோது: **''கல்லறையை அடைத்திருந்த கல் புரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு, உள்ளே பிரவேசித்து கர்த்தராகிய இயேசுவின் சரீரத்ததைக் காணாமல், அதைக் குறித்து மிகுந்த கலக்கமடைந்திருக்கையில், பிரகாசமுள்ள வஸ்திரந்தரித்த இரண்டுபேர் அவர்கள் அருகே நின்றார்கள். அந்த ஸ்திரீகள் பயப்பட்டு தலைகவிழ்ந்து தரையை நோக்கி நிற்கையில், அந்த இரண்டுபேரும் அவர்களை நோக்கி; உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை, அவர் உயிர்த்தெழுந்தார்'' ( லூக் .24: 2- 6).**

இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்துவிட்டார் என்று மட்டுமே அனேகர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் உயிரோடிருக்கிறார் என்று விசுவாசிக்க வேண்டும். இயேசு சொன்னார்: **"மரித்தேன் , ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவரா யிருக்கிறேன்" (வெளி.1:18).** ஆம் மரணத்துக்கும், பாதாளத்துக்கும் அவரே திறவுகோல்.

**"ஏனெனில் கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும் படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங் களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலேஉயிர்ப்பிக்கப்பட்டார்.அந்த ஆவியிலே**

**அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்". (1பேது.3:18,19)**

நானே சாத்தானையும் மரணத்தையும் ஜெயித்திருக் கிறேன் என்று சாத்தானால் பாதாளத்தில் காவல் பண்ணப்பட்ட ஆவிகளிடத்தில், உயிர்த்தெழுந்த இயேசு அந்த ஆவியினாலே பிரசங்கித்து அதிகாரத்தை உறுதிப்படுத்தினார். சாத்தானையும், அவன் இராஜ்யத்தையும், மரணத்தையும் அதின் வல்லமையையும் இயேசு ஜெயித்துவிட்டார். இனி சாத்தானுக்கு எந்த வல்லமையும் இல்லை என்பதை காவலிலுள்ள ஆவிகளிடத்தில் இயேசுவே நேரில் சென்று அறிவித்தார்.

இயேசுவின் இரத்தத்தினால் மீட்கப்பட்ட அனுபவம் உங்களுக்கு இருக்குமானால், உங்கள் மேல் சாத்தானுக்கு எந்த உரிமையும் இல்லை. கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறபடியால் மரணத்தின் மேல் உங்களுக்கு அதிகாரமுண்டு. பாதாளத்தின் மேல் உங்களுக்கு அதிகாரம் உண்டு. **"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடைய வரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்" (எபி. 2:14,15)**.
ஆம், மரணத்துக்கும் பாதாளத்துக்கும் உங்கள் மேல் அதிகாரமில்லை. நீங்கள் இயேசு கிறிஸ்துவின் மூலமாக ஜெயம் பெற்றிருக்கிறீர்கள்.

**"நான் ஊழியத்துக்கு வந்த ஆரம்பத்தில் ஒரு சமயம் நானும் என்னுடன் இரண்டு சகோதரர்களுமாக சேர்ந்து அசுத்த ஆவி பிடித்த ஒரு மனிதனுக்காக ஜெபிக்கச் சென்றோம். அசுத்த ஆவி பிடித்திருந்த அந்த மனிதனின் கைகளையும், கால்களையும் இரும்பு சங்கிலி மூலம் கட்டி ஒரு மரத்தில் மாட்டி வைத்திருந்தார்கள்.**

**அவன் தன் உடம்பில் முழுவதும் தன்னைத்தானே காயப்படுத்தி வைத்திருந்தான். நாங்கள் ஊழியத்தை முடித்து திரும்பி வரும் பொழுது இரவு பதினொன்று மணிக்குமேல் ஆகிவிட்டது. நடந்து தான் வந்து கொண்டிருந்தோம். வழியின் இரண்டு பக்கமும் சோள நாற்றுகள் வளர்ந்து இருந்தது. வண்டுகளின் இரைச்சல் வேறு, இரவு நேரம் என்பதால் அந்த இரைச்சல்கள் பயத்தை கொடுத்தது. அப்பொழுது பிசாசு என் மனதில் பேசினான். நீ வீட்டுக்குத்தானே போகிறாய். அங்கே உன் இரண்டு சிறு பிள்ளைகளும் உனக்கு எதிர்கொண்டு வருவார்கள். நானும் உன்னோடுதான் வந்து கொண்டிருக்கிறேன் என்று பேசினான். என் உள்ளத்தில் பயம் உண்டாயிற்று. உள்ளத்தில் பயம் உண்டான உடனே குழப்பவாதியான பிசாசு நமக்குள் வர முயற்சிக்கிறான் என்று புரிந்துகொண்டேன். நான் உடனே இயேசுவை நோக்கி ஜெபித்தேன். உடனே இயேசு என்னோடே பேசினார். நீ பிசாசுக்கு பயப்படவேண்டாம், நான் சிந்திய இரத்தம் உன் மேலும், உன் மனைவியின் மேலும், உன் இரண்டு பிள்ளைகளின் மேலும் பூசப்பட்டிருக்கிறது. உன் எல்லைகளிளெல்லாம் மூடியிருக்கிறது என்றார். ஆம், இயேசு பிசாசை சிலுவையிலே சந்தித்து வெற்றி பெற்றுவிட்டார். இந்த வெற்றியில் கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் பங்கு உண்டு.**

இயேசு சிலுவையில் அறையப்பட்ட பின்பு அவருடன் இருந்த சீஷர்கள் எல்லாரும் பயந்து ஒன்று கூடி இனி நாம் என்ன செய்வது? நாம் நம்பியிருந்த இயேசுவுக்கு இப்படி ஆகி விட்டதே என்று கலங்கி செய்வதறியாது திகைத்து இருந்த வேளையில் பூட்டிய வீட்டுக்குள் இயேசு வந்தார். **“வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று; உங்களுக்குச் சமாதானம் என்றார். அவர் இப்படிச்சொல்லித் தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார். சீஷர்கள் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்” (யோவான் 20:19,20).**

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு சீஷர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராக பலமுறை காண்பித்திருக்கிறார். **"அவர் பாடுபட்டபின்பு, நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்குத் தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரியவைகளை அவர்களுடனே பேசி, அநேகம் தெளிவான திருஷ்டாந்தங்களினாலே அவர்களுக்குத் தம்மை உயிரோடிருக்கிறவராகக் காண்பித்தார்" (அப் 1:3).**

ஒரு சமயம் இயேசுவுடன் இருந்த சீஷர்கள், அவர் அவர்களை விட்டுப் பிதாவினிடத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட படியால் தங்கள் பழைய வாழ்க்கைக்குத் திரும்பினார்கள். இயேசு அவர்களைக் கைவிடவில்லை, தேடி வந்தார். **"சீமோன் பேதுரு மற்றவர்களை நோக்கி; மீன்பிடிக்கப்போகிறேன் என்றான். அதற்கு அவர்கள்; நாங்களும் உம்முடனேகூட வருகிறோம் என்றார்கள். அவர்கள் புறப்பட்டுப் போய், உடனே படவேறினார்கள், அந்த இராத்திரியிலே அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமான போது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள். அப்பொழுது அவர் நீங்கள் படவுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்கமாட்டாதிருந்தார்கள்"**
**(யோவான் 21:3-6).**

பின்மாறிப்போன தமது சீஷர்களை அவரே தேடி வந்து தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார். அன்பினாலே அவர்களுடைய இருதயத்தை ஜெயித்தார். **"சீமோன்பேதுரு படவில் ஏறி நூற்றைம்பத்துமூன்று பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்: இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை, இயேசு அவர்களை நோக்கி வாருங்கள், போஜனம்பண்ணுங்கள் என்றார். அவரைக் கர்த்தரென்று சீஷர்கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும்; நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை. அப்பொழுது இயேசு வந்து, அப்பத்தையும், மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்" (யோ 21:11-13).**

இப்பொழுதும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஒரு மனிதன் தன்னுடைய ஆவிக்குரிய வாழ்வில் உலகத்தின் நெருக்கடியானாலும், பாவத்தின் குற்றமனசாட்சியானாலும், நெருக்கப்பட்டு வழி தெரியாமல் அலையும் போது அவரே அவனைத் தேடி வருகிறார். பல அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் தம் அன்பை வெளிப்படுத்தி மீண்டும் தம்மிடம் சேர்த்துக்கொள்ள தம்முடைய இரு கரங்களையும் நீட்டுகிறார். மகனே, மகளே: நான் உனக்காக என் உயிரை விலையாகக் கொடுத்திருக்கிறேன். நான் உன்னை இழக்க விரும்பவில்லை. நீ என்னிடம் வா என்று அழைக்கிறார். சோர்ந்து போய் இருந்தாலும், கவலையோடு இருந்தாலும் அவருடைய அன்பின் குரல் நம்மைத் தூக்கி நிறுத்துகிறது.

இயேசுகிறிஸ்து தம்முடைய அன்பின் கிரியைகள் மூலமாக நம்மைத் தேடி வருகிறார். இயேசு சொன்னார்: **“ஆயுதந் தரித்த பலவான் தன் அரமனையைக் காக்கிறபோது, அவனுடைய பொருள் பத்திரப்பட்டிருக்கும். அவனிலும் அதிக பலவான் வந்து, அவனை மேற்கொள்வானேயாகில், அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு, அவனுடைய கொள்ளைப்பொருளைப் பங்கிடுவான்” (லூக் 11:21,22).**

ஆம், சாத்தான் நம்மை பல பாவங்களைச் செய்யத் தூண்டிவிட்டு நாம் பாவத்துக்குள்ளாக்கப்பட்டு அதற்கு அடிமையான பின்பு, மீண்டும் மனந்திரும்பி இயேசுவிடம் போகக்கூடாதபடி பல அரண்களை வைத்து நம்முடைய சிந்தனை மண்டலத்தைப் பாதுகாக்கிறான். மீண்டும் சுவிசேஷமும், தேவனுடைய அற்புதத்தின் செய்திகளும், நம்முடைய செவிக்கு வந்துவிடாதபடி சாத்தான் எச்சரிக்கை யாயிருக்கிறான். ஆனால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாம் எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும் நம்மை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்.

வேதம் சொல்லுகிறது: **“அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்” (1 பேது.2:24)**

**“உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்த சேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து: நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து : துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்” (கொலோ.2:13-15).** ஆம், சிலுவையிலே சாத்தானுடன் போர் செய்து, அந்த வெற்றியை நமக்காகத் தந்திருக்கிறார்.

★ ★ ★